Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–25 | 09–08–2004 | திங்கட்கிழமை | ஓசை –173




# சனாதிபதி சந்திரிகா- ஜே.வி.பி.க்கு இடையில் முரண்பாடுகள் மேலும் தீவிரமடைகின்றன

## சனாதிபதியைச் சீண்டும் வகையில் ஜே.வி.பி. பிரச்சாரம்

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி.க்கும் சிறிலங்கா சனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் வலுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இடைக்கால நிர்வாகசபை தொடர்பில் சனாதிபதியைச் சீண்டும் வகையில் ஜே.வி.பி. பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் குறித்து பொறுப்பற்ற முறையில் ஜே.வி.பி.யினர் கருத்து வெளியிட்டு வருவதாக அண்மையில் இடம்பெற்ற நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஜே.வி.பி.யினருடன் கடுமையாக வாக்குவாதப்பட்ட சனாதிபதி அதன் பின்னர், கூட்டமைப்புத் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

அதன் பின்னரும் இடைக்கால நிர்வாக யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேசப் போவதில்லை என சனாதிபதி தமக்கு உறுதியளித்திருப்பதாக, சனாதிபதியைச் சீண்டும் வகையில் ஜே.வி.பி.யினர் மக்கள் மத்தியில் கருத்துக்களைப் பரப்பி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜே.வி.பி.யினர் வசமிருக்கும் விவசாய அமைச்சினால் அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்படவிருக்கும் குளங்களைப் புனரமைக்கும் விசேட ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாததன் மூலம் தனது அதிருப்தியை அவர் வெளிப்படுத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைத் தாரை வார்க்கும் வகையில் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடாது

### -ஜே.வி.பி.வலியுறுத்துகிறது

இலங்கையைத் தாரை வார்த்துக் கொடுக்கும் வகையிலோ அல்லது கோடிக்கணக்கான வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனோ பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படக் கூடாதென ஜே.வி.பி. கோரியுள்ளது. ஜே.வி.பி.யினரால் வெளியிடப்பட்டுள்ள. இந்த அறிக்கையில் இடைக்கால நிர்வாக சபை அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டுமென்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கையே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் காலதாமதம் ஆவதற்கான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் காலதாமதமாவதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது, எனவும், நான்கு இலட்சத்து ஐம்பது மில்லியன் ரூபா சர்வதேச நிதியுதவியைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் ராஜதந்திர முயற்சி; நோர்வே தரப்பினர் மகிழ்ச்சி

சிறிலங்கா சனாதிபதியின் இராஜதந்திர முயற்சி குறித்து நோர்வேத் தரப்பு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு சனாதிபதி எடுத்துள்ள பிந்திய நகர்வு தற்போதைய சூழ்நிலையில் அவசியமானது எனக் குறிப்பிட்டுள்ள நோர்வேத் தரப்பு, விரைவில் தமது பேச்சுவார்த்தை ஏற்பாட்டாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து தமிழீழவிடுதலைப் புலிகளை சந்தித்துப் பேச எண்ணம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் குறித்து பேசுவதன் மூலம் சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் வகையிலேயே சனாதிபதி நோர்வே ஏற்பாட்டாளர்களுக்கு தகவல் அனுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்குகுழிகள் எரிந்து நாசம்

மணலாறுப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் படையினரின் இரண்டு காவல் பதுங்குகுழிகள் நாசமானதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

சுமார் 20 அடி முதல் 30 அடி வரையிலான பதுங்குகுழிகளே நாசமாயின. இது நாசவேலையா என்பது குறித்து படைத்தரப்பு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (32)

## கிளி.,முல்லை மாவட்ட சில சிறந்த பெறுபேறுகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.முல்லை மாவட்ட பாடசாலைகளின் க.பொ.த.(உ.த) பரீட்சை பெறுபேறுகள் நேற்று வன்னிக்கு வந்துள்ளன.

நேற்று நண்பகல் கிளி. வலயக் கல்விப் பணிமனைக்குவந்து சேர்ந்த (க.பொ.த) உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் யாவற்றையும் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையினை வலயக் கல்விப் பணிமனையினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று வந்து சேர்ந்துள்ள கிளி. முல்லை மாவட்டங்களின் சிறப்புப் பெறுபேறுகள் பெற்றோரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் விண்ணப்பித்த 210 பேரில் 124 பட்டதாரிகளுக்கு நியமனம்

### முல்லை அரசாங்க அதிபர் தகவல்

முல்லை மாவட்டத்தில் 124 வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஓகஸ்ட் 31ஆம் திகதிக்கு நியமனம் வழங்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

210 வேலையற்ற பட்டதாரிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்த போதும் 124 பேர் மட்டுமே தகுதி உள்ளவராக கணிக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 12 பேரும், கரை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜயந்த தனபால இன்று யாழ். வருகிறார்

சிறிலங்கா அரசியல் சமாதானச்செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால இன்று யாழ்ப் பாணத்துக்கான விஜயம் ஒன்றினை மேற்கொள்கிறார்.

இருநாள் பயணமாக யாழ். குடா நாட்டிற்கு வரும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் யாழ். குடா நாட்டு படை உயர் அதிகாரிகளையும், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவிருப்

(12ஆம் பக்கம் பார்க்க)


## வன்னிரெக் நிறுவனத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

வன்னி ரெக் நிறுவனத்தின் முதலாவது பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இப்பட்டமளிப்பு விழா இடம்பெற்றது. ஆரம்பநிகழ்வாக பொது ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்

(12ஆம் பக்கம் பார்க்க)



## ஒருதேசம் சொந்தக்காலில் நிற்கும்போதே பூமிப்பந்தில் உறுதியான இடத்தைப் பெறமுடியும்

### வன்னித் தொ.நு.நிறுவனப்பட்டமளிப்பு நிகழ்வில் தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

ஒரு தேசம் தனது சொந்தக்காலில், சொந்த வளத்தில் தமது சொந்த முயற்சியில் முன்னேறுகின்ற போதுதான் அந்த மக்களினம் இந்தப் பூமிப்பந்திலே உறுதியான இடத்தைப் பெறலாம். அந்த வகையில் எமது தேசியத் தலைவருடைய எண்ணத்திற்கு ஏற்ப நாங்கள் சொந்தக் காலில், சொந்தப் பலத்துடன், சொந்த வளத்தில் தங்கியிருக்க வேண்டும். என்கின்ற அவருடைய வழிகாட்டலுக்கு அமைய எங்களுடைய புலம்பெயர்ந்த மக்கள் சகலதுறைகளிலும் எங்களுக்கு பெரும் பங்காற்றி வருகிறார்கள் என்று வன்னி தொழில் நுட்ப நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# முறிகண்டி பிள்ளையார் ஆலயமுன்றலிலிருந்த வீதித்தடையை உடைத்துச் சென்ற வாகனம்

(கிளிநொச்சி)

தறிகெட்டு ஓடிவந்த வாகனம் முறிகண்டிப் பிள்ளையார் ஆலய வீதித்தடையையும் உடைத்துக் கொண்டு சென்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் முறிகண்டிப்பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

மாங்குளம் பக்கமாக இருந்து கருங்கல் ஏற்றிவந்த எல்வ் ரக ட்ரக் வாகனம் ஒன்று முறிகண்டி பிள்ளையார் ஆலய வீதித் தடையையும் உடைத்துக் கொண்டு அதிவேகமாக வந்து அக்கராயன் வீதியில் திரும்பியே நின்றது.

இவ் வாகனத்தின் சாரதியை திருமுறிகண்டி காவல்துறையினர் விசாரணை செய்தபோது 'பிறேக்' உடைந்து விட்டதாலேயே இவ்வாறு நேரிட்டது என அவர் தெரிவித்தார்.திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய முன்புறமாக செல்லும் ஏ-9 வீதி மறிக்கப்பட்டு கடைவீதிக்குப் பின்புறமாக வாகனங்கள் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. (09)

## சமகால அரசியற் கருத்தரங்கு

அக்கராயன் பிரதேச அரசியல் துறையினரால் கண்ணகைபுரம் மேற்கு கிராமசேவகர் பிரிவில் முட்கொம்பன் பிரதேசத்தில் கிராம மக்களிற்கு சமகால அரசியல் தெளிவூட்டல் கருத்துக்களையும், விழிப்புணர்வுக் கருத்துக்களையும் வெளியிடும் வகையில் பொதுக் கூட்டம் ஒன்று கடந்த 25ஆம் திகதி மாலை 4 மணியளவில் அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அ.கரிகாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் கருத்துரைகளை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அ.கரிகாலன் தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் ஆகியோர் வழங்கினர். (15)

## கடன் வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யு.என்.ரி.பி. நிறுவன உதவியுடன் முழங்காவில் கிராமத்தில் கடனுதவி வழங்கும் நிகழ்வு பெ.அ.பு நிறுவன இணைப்பாளர் மா.செல்வி அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. அவர் தனது உரையில் கடன் திட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும், சேமிப்பின் முக்கியத்துவம் தொடர்பாகவும்; கருத்துக்களை பகிர்ந்ததுடன், 11 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்பு, வியாபாரம், போன்ற தொழில்களுக்கு. 1,10000/= பெறுமதியான நிதி வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் முழங்காவில் பகுதி கிராம அலுவலர் கலந்து கொண்டு கருத்துப் பகிர்ந்ததுடன், மாதர் சங்கத் தலைவியும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

## பயிற்சி வகுப்பு

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் சிறுவர் உரிமை தொடர்பான ஒருநாள் பயிற்சி வகுப்பு கடந்த 3ஆம் திகதி சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் செ.சந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் செ.தயாநந்தா ஆரம்பித்து வைத்து கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து சிறுவர் உரிமை தொடர்பான கருத்துரைகளை செல்வி. சந்திரா செல்வரத்தினம் வழங்கினார். சிறுவர் நலன் தொடர்பான கருத்துக்களை நன்னடத்தை உத்தியோகத்தர் சிவபால சுப்பிரமணியம் வழங்கினார்.

இந்நிகழ்வில் சிறுவர் உரிமை, சிறுவர் நலன், சிறுவர் துஷ்பிரயோகம் போன்றன ஆராயப்பட்டன.

இதில் பெருமளவான. முன்பள்ளி ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# சாவு அறிவித்தல்



## பரமசாமி மகேந்திரன்

கரவெட்டி கல்லுவத்தைப் பிறப்பிடமாகவும் 65R, பகுதி I விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி மகேந்திரன் அவர்கள் 08.08.2004 ஞாயிறு காலை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பரமசாமி அழகம்மா தம்பதிகளின் மூத்த மகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும்,சுதர்ஷன் சுகிர்தன்,சுமிர்தன்,சுகந்தன் சுஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல 65R பகுதி I விசுவமடுவில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 09.08.2004 இன்று நண்பகல் இடம் பெற்று, பூதவுடல் விசுவமடு இந்து மயானத்துக்கு பி.ப. 2 மணிக்கு எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
ப.திருநாமராசா
(தம்பி)
உடையார்கட்டு

(4890)

# சாவு அறிவித்தல்

## வரப்பிரகாசம் ஞானம்மா

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வரப்பிரகாசம் ஞானம்மா 08.08.2004 அன்று காலமானார். இவர் காலம்சென்ற மரியாம் பிள்ளை வரப்பிரகாசத்தின் மனைவியும், சந்தியாகுப்பிள்ளை (ராசையா), காலம்சென்ற லெட்டிசியா, றோசம்மா, காலஞ்சென்ற ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராசா (அமெரிக்கா), தவராசா (தவம்), மேரி கொன்சப்சன் ஆகியோரின் தாயாரும்; துரைராஜா (5ஆம் வாய்க்கால், பரந்தன் CO, ஓய்வு பெற்ற திட்ட முகாமையாளர் நிர்வாக அலுவலர் KAROD), மேரி றோசலின் (அமெரிக்கா), மேரிகிறேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், விபீஸ் (லண்டன்), எமிலி, விஜந் ,பமிலா (அமெரிக்கா), பிறயன் (அமெரிக்கா), நிஷாந், நிமலேஸ், றெனிற்றா, வினிற்றா ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார். அன்னாரது பூதவுடல் ஆ.வி. துரைராசா CO அவர்களின் 5ஆம் வாய்க்கால், பரந்தன் இல்லத்தில் 09.08.2004 பி.ப. 1மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அதன்பின் அவரது சொந்த இடமான நெல்லியடி கரவெட்டிக்கு எடுத்துச்செல்லப்படும், இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

தகவல்:-
ஆ.வி. துரைராசா CO,
பரந்தன்.

(4892)

# சாவு அறிவித்தல்

## துரைசாமி தளையசிங்கம்


துரைசாமி தளையசிங்கம் காலமானார். அன்னார் காலம் சென்ற துரைசாமி செல்லம்மாவின் மகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சிவகுரு பொன்னம்மாவின் மருமகனும், சிவபாக்கியம், மகேஸ்வரி, கனகேஸ்வரி, ரஞ்சினி, சந்திரசேகரின் மைத்துனரும், ஜானகியம்மா, ராசேந்திரன், காலஞ்சென்ற தேவராசா, காலம் சென்ற பூவ தியம்மா, ஆனந்தராசா, பத்மநாதன், ராணி, சாம்ப சிவம், தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும்; ரவீந்திரன் (ஜேர்மன்), தெய்வேந்திரன், பாவு (லண்டன்), காலஞ்சென்ற அசோக்மாலா, வசந்திமாலா, ஜெயந்திமாலா, சகுந்தலாதேவி, காலம் சென்ற கலாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும்; கனகசபாவதி, லதா (கனடா), ரஜேஸ்வரி (லண்டன்), சந்திரமௌலீஷன் ஆகியோரின் மாமனாரும்; கவிதா, சுவிதா,சுஜீவன், கயாளன், கயேதன் (கனடா), சாருகேசி, அங்குஷன் (லண்டன்), காண்டி, லச்சா, துளைக்ஷன், குமணன், சங்கவி ஆகியோரின் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.08.2004 பி.ப. 2.00 மணிக்கு தருமபுரம் 11 ஆம் யுனிட், 466 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று,தகனக்கிரியை தருமபுரம் இந்து மயானத்தில் இடம் பெறும்.

தகவல்,
சந்திரமௌலீசன்
(மருமகன்),
அன்பு பிள்ளையார் மில்,
தருமபுரம்.

(4889)

# கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்

விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ சங்க உப தலைவரும், ஆரம்ப கால உறுப்பினரும், சமூக சேவையாளரும்,

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1945 | | 2004 |
| — | | — |
| 05 |  | 08 |
| — | | — |
| 05 | | 08 |

மூத்த கூட்டுறவாளரும் ஆகிய

அமரர்

## பரமசாமி மகேந்திரன்

அவர்களின் திடீர் மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ.சங்கம்,
விசுவமடு.

(4891)

# சூடான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ.நா.விசேட தூதுவருடன் ஒப்பந்தம்

-வன்முறையை முடிவிற்குக் கொண்டுவர முயற்சி

**சூடான் வெளிவிவகார அமைச்சரும் ஐ.நா.விசேடதூதுவரும் சூடானில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளனர்.**

சூடானில் டார்பர் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கென பாதுகாப்பான முகாம் ஒன்று உருவாக்கப்படுமென சூடான் அரசு அறிவித்துள்ளது.

அதேவேளை அப்பகுதியில் தாக்குதலை நடத்திவருகின்ற அரபு இராணுவத்தினரை, நிராயுதபாணிகளாகுவதற்கும், சிவில் பிரதேசத்தில் சூடான் இராணுவ்ம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சூடான் வெளிவிவகார அமைச்சர் இஸ்மாயிலுக்கும், ஐ.நாடுகள் விசேட தூதுவருக்குமிடையே புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முதலாவது நகல் ஒப்பந்தம் கடந்த வெள்ளிக்கிழமை தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் உத்தியோகபூர்வ முறையில் இவ்விரு அதிகாரிகளினாலும் நாளை கைச்சாத்திடப்படவுள்ளது.


இதேவேளை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் 15 அங்கத்துவநாடுகளும் இதனை அங்கீகரித்துள்ளன. செயலாளர் நாயகம் கொபிஅனானும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், இவ் ஒப்பந்தத்தை தான் வரவேற்பதாகவும், டார்பர் பிரதேசத்தின் நிலைமையை வழமைக்கு கொண்டுவரவென துரிதமான, நம்பகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒப்பந்தத்திற்கு அமைய சூடான் அரசு நடந்து கொள்ளுமானால் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டிய அவசியம் ஏற்படாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இத்தாலிக்கு எச்சரிக்கை

(மோறாம்)

ஈராக்கிலுள்ள இத்தாலி நாட்டு வீரர்கள் இயன்றளவு விரைவில் வாபஸ்பெறாதுவிட்டால் இத்தாலி மீது தாக்குதல் நடத்தப்படுமென அல்ஹைதா தீவிரவாதிகள் நேற்று எச்சரித்துள்ளனர்.




அட்லாண்டாவிலுள்ள தகவல்துறைப் பணியாளர்களுக்கு பணிப் பாதுகாப்பு, வைத்தியவசதி செய்து கொடுக்காததைக் கண்டித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ள தொழிலாளர்களுக்கு சுலோகங்களை ஒழுங்கு படுத்தும் தொழிற் சங்கவாதி ஒருவர்.

## அமெ. சனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்கள் கெரிக்கு ஆதரவு

-கருத்துக்கணிப்பு தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடும் புஷ்சை தோற்கடிக்க வேண்டும் என்று அமெரிக்க முஸ்லிம்கள் தீர்மானித்துள்ளனர்.

அமெரிக்காவில் 70 இலட்சம் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். அவர்களில் 30 இலட்சம் பேர் ஓட்டுப் போடத் தகுதி பெற்றவர்கள். அமெரிக்காவில் உள்ள அரபு அமெரிக்கன் இன்ஸ்டிடியூட் நடத்திய கருத்துக்கணிப்பில் 51சதவீத முஸ்லிம்கள் கூறுகையில், புஷ்சை எதிர்த்துப் போட்டியிடும் கெரிக்கு ஓட்டுப் போடப் போவதாக கூறியுள்ளனர். 24 சதவீத முஸ்லிம்கள் புஷ்சுக்கும், 17 சதவீத முஸ்லிம்கள் சுயேட்சை வேட்பாளர் ரால்ப் காடர்க்கும் ஓட்டுப்போடப் போவதாக கூறினார்கள்.

இதே போல மெக்சிகனில் உள்ள சமூகக் கொள்கைக்கான இன்ஸ்டிடியூட் நடத்திய கருத்துக் கணிப்பில், 85 சதவீத முஸ்லிம்கள் புஷ்சின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை என்று கூறியுள்ளனர் . பாகிஸ்தானில் பிறந்த முஸ்லிம்கள் மட்டும், புஷ்சுக்கு ஆதரவாகவுள்ளனர். ஜேர்சியின் வெளிநாட்டுக் கொள்கை பாகிஸ்தான், சவுதி அரேபியா ஆகியவற்றுக்கு எதிராக உள்ளது என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

## 5 அல்–ஹைதாக்களைத் தேடி பிரி.பொலிசார் வலைவீச்சு

(லண்டன்)

பிரிட்டனில் விமான நிலையத்தைத் தாக்குவதற்கு சதித்திட்டம் தீட்டியது தொடர்பாக பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அல்-ஹைதா தீவிரவாதிகள் ஐந்துபேரைத் தேடும் பணியைப் பிரிட்டன் பொலிசார் தொடங்கியுள்ளனர்.

பிரிட்டனில் பதுங்கி இருக்கும் இவர்கள் கடந்தவாரம் பொலிசாரின் தேடுதலில் தப்பிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் தீவிரவாதிகள் ஐந்துபேரும் பிரிட்டனுக்குள்தான் பதுங்கியிருப்பதாகப் பாதுகாப்புப் படையினர் நம்புகின்றனர்.




அமெரிக்க சனநாயக்கட்சி வேட்பாளர் ஜோன்ஹெரி தனது மனைவி சகிதம் தேர்தல் பிரச்சாரத்திலீடுபட்டுள்ளார்.

## 7 பணயக் கைதிகளை விடுவிக்க தீவிரவாதிகள் புதிய நிபந்தனை விதிப்பு

(பாக்தாத்)

தீவிரவாதிகளால் ஈராக்கில் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள மூன்று இந்தியர்கள் உட்பட ஏழுபேரை விடுவிப்பதில் இறுதி நேரத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக ஈராக்கிலுள்ள குவைத் நிறுவன செய்தித் தொடர்பாளர் நேற்று குவைத்திலிருந்து புதுடில்லிக்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்திவரும் ஷேக் இஸ்லாம் அல் தொலமியுடன் குவைத் நிறுவனப் பிரதிநிதி நேற்று முன்தினம் இரவு உடன்பாடு கண்டபின்னர் தீவிரவாதிகள் திடீரென்று நேற்றுப் புதிய கோரிக்கைகளை முன் வைததுள்ளதாகவும், இதனால் பணயக் கைதிகளை மீட்பதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

பணயக் கைதிகளை மீட்க குவைத் நிறுவனம் எதையும் செய்யும் என்பதை தீவிரவாதிகள் புரிந்து வைத்திருப்பதாகவும், அதனால்தான் அவர்கள் ஒவ்வொன்றாகப் புதிய நிர்ப்பந்தங்களை விதிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் குவைத் நிறுவனம் ஒன்றில் சாரதிகளாக இந்தியர் மூவர், கென்யர் மூவர், எகிப்தியர் ஒருவர் ஆகிய ஏழுபேரையும் தீவிரவாதிகள் கடந்த மாதம் 21ஆம் திகதி கடத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒப்பந்தப்படி செயற்படுவோம் ஐவரிக்கோஸ்ட் சனாதிபதி அறிவிப்பு

ஐவரிக் கோஸ்டில் தடைப் பட்டுள்ள சமாதான செயற்பாடு களை முன்னெடுக்கும் நோக்கில் புதிதாக கைச்சாத்திட்டுள்ள உடன் படிக்கைக்கு அமைய செயற்படவுள்ளதாக அந்நாட்டின் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

கானாவின் தலைநகரில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து ஐவரிக்கோஸ்ட் அரசும் கிளர்ச்சி வாதிகளும் சமாதான ஒப்பந்தப் ஒன்றில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க கூட்டணிப்படைகளுக்கெதிராக தாக்குதல்கள் ஈராக்கில் அதிகரிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் புதிதாகப் பதவியேற்றுள்ள அல்லாவியின் இடைக்கால நிர்வாக அரசாங்கத்திற்கு சவால் விடுக்கும் வகையில் அமெரிக்கக் கூட்டணிப்படைகளுக்கெதிராக முஸ்தபா அல்சதாரின் விசுவாசிகள் ஈராக்கின் பல நகரங்களிலும் தீவிரவாத நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த மோதல்களில் பாரிய அழிவுகள் இடம்பெற்றுள்ள போதிலும் இழப்புக்கள் பற்றிய துல்லியமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச எதிர்ப்புப் படைகள் சரணடைவதற்கு வரையறுக்கப்பட்ட மன்னிப்பை வழ்ங்க தாம் தயார் என ஈராக்கிய இடைக்கால அரசாங்கம் அறிவித்தபோதிலும் இதனை கெரில்லாக்கள் நிராகரித்துள்ளனர்.

சியா இயக்கத் தலைவரான முஸ்தாபா அல்சதாரின் வீட்டை அமெரிக்கப் படைகள் சுற்றிவளைத்ததையடுத்தே இத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மோதல் இடம்பெறும் நஜாப் நகருக்கு ஈராக்கிய பிரதமர் அலாவி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். பாக்தாத்திலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைநகரிலுள்ள அமெரிக்கப் பாதுகாப்புப் படையினரின் கட்டடங்களை நோக்கி நேற்று முன்தினமிரவு தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை பஸ்ரா நகரில் பொலிசாருக்கும் பிரிவினைவாத கெரில்லாக்களிற்குமிடையில் ஏற்பட்ட மோதலின்போது பொலிஸ நிலையமொன்று சேதமாக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.



நீர்வாழ் கிளிஞ்சில் பிராணிகளைத் தேடி ஆராய்வதில் ஆழ்ந்த அறிவுடைய ஆராய்ச்சியாளரான இங்கிலாந்தின் ஹரோல்ட் பென்சன் தனது தேடல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

## ஈராக்கில் போர்புரியும் இரு தரப்பினரும் யுத்த நிறுத்தம் செய்து கொள்ள முன்வருக!

-ஐ.நா.பொதுச்செயலர் கொபிஅனான் கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கில் மீண்டும் மூர்க்கம் பெற்றுள்ள மோதல்களை முடிவிற்குக் கொண்டுவர யுத்த நிறுத்த ஒப்பந்த மொன்றிற்கு இருதரப்பினரும் முன்வரவேண்டுமென ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் வேண்டுகோள்விடுத்துள்ளார். ஈராக்கின் பல நகரங்களில் கடந்த சில நாட்களாக வலுப்பெற்றுள்ள மோதல்கள் குறித்து தாம் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் கொபி அனான் சுட்டிக்காட்டியுள்ளார். இருந்த போதிலும் தற்போது அங்குள்ள சூழ் நிலையின் படி இரு தரப்பினரும் அமைதி நிலைக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென சர்வதேச செய்தி ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.



தெற்கு அகமதாபாத்தில் இருந்து 250 கி.மீ இதற்கு அப்பாலுள்ள பக்றோல் கிராமத்தில் வெள்ளப் பெருக்குக் காரணமாகத் தமது உடமைகளுடன் வெளியேறும் கிராம வாசிகள் .

# நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு அனைவரும் விவேகமாகவும், விரைவாகவும் செயற்பட வேண்டும்

## -முல்லை. மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்

(புதுக்குடியிருப்பு)

**இந்தப் போர்ஓய்வை நிரந்தரப்போர் ஓய்வாக்குவதற்கும் நிரந்தர தீர்வை எட்டுவதற்கும் அனைவரும் வேகமாகவும், விவேகத்துடனும் செயற்படவேண்டியது அவசியமாகும் என்று முல்லை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் தெரிவித்தார்.**

புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறை செயலகத்தில் அப் பிரதேச கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கும் ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர்களுக்குமான கூட்டம் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் வே.கனகசுந்தரம் சுவாமி தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் வீர முரசு நிகழ்வு தொடர்பாகவும், சங்கம நிகழ்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

அந்த வகையில் எதிர்வரும் 10ஆம் திகதி வீரமுரசு. நிகழ்வு புதுக்குடியிருப்பில் உள்ள கொக்குளாய்ப் பாடசாலையிலும், எதிர்வரும் 13ஆம் திகதி சங்கம நிகழ்வு புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் இடம்பெற ஏற்பாடாகி உள்ளது.

இக்கூட்டத்தில் கருத்துரைகளை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், செயலாளர் சி.வேதவனம், முல்லை மாவட்ட அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன், மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் பொருளாளர் அற்புதராசா ஆகியோர் வழங்கினர். முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் உரையில் அன்று எல்லோரும் ஒன்றுபட நின்று பேரெழுச்சிக் குழுவாக செயற்பட்டதன் விளைவுதான் இந்த போர்ஓய்வுக்குக் காரணம். இன்று தேசிய எழுச்சிப் பேரவையாக செயற்படும் நாங்கள் இந்த போர் ஓய்வை நிரந்தர போர் ஓய்வாக்குவதற்கும் நிரந்தர தீர்வை எட்டுவதற்கும் அனைவரும் வேகமாகவும் விவேகமாகவும் செயற்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார். (08)

### கொடுப்பனவு வழங்கல்

உலக வங்கியின் நிதியுதவியுடன் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் முதற்கட்டமாக 50 வீடுகளை அமைப்பதற்கான முதற்கட்ட கொடுப்பனவாக ரூபா 20 ஆயிரம் கடந்த 5 ஆம் திகதி கரைதுறைப் பற்று உதவி அரச அதிபர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (20)

# அனிஞ்சியன்குளம் பகுதியில் கிராமத் தரிசிப்பு நிகழ்வு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய்ப் பிரதேச அனிஞ்சியன் குளம் கிராம சேவையாளர் பிரிவில் சகல துறை சார்ந்த அரச அதிகாரிகள், போராளிகளும் இணைந்து கிராமத் தரிசிப்பினை மேற்கொண்டனர்.

மேற்படி கிராமத் தரிசிப்பு நிகழ்வு அனிஞ்சியன்குளம் அகலியா முன்பள்ளிப் பாடசாலை வளாகத்தில் கடந்த வெள்ளியன்று காலை 8.30 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணன் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வின் பொதுச் சுடரினை துணுக்காய்க் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.அமிர்தலிங்கம் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டப் பொறுப்பாளர் பூங்குன்றன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து 14 மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடர் ஏற்றல், மலர் வணக்கம் என்பன இடம்பெற்றன. துறைசார்ந்த அதிகாரிகள், போராளிகள் பொறுப்பாளர்கள் எனப் பலரும் அனிஞ்சியன் குளம் கிராமத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வுகள் எடுக்கப்பட்டு, பிறப்பு, இறப்பு பதிவுகளை உடன் செய்துள்ளனர். இது போன்று சந்தை வீதி புனரமைப்பு, குளம் புனரமைப்பு கட்டடங் கள் அமைத்தல், குடி நீர்ப்பிரச்சினையை தீர்த்தல், விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், நீர்ப்பாசனம் , மீளக் குடியமரல், காணி வழங்கல், பாடசாலை செல்லாதோர் குறித்துக் கவனம் எடுத்தல் போன்ற பிரச்சினைகள் மக்கள் முன் உறுதியளிக்கப்பட்டது. மாலை 5.00 மணிவரையும் நடத்தப்பட்ட கிராமத் தரிசிப்பில் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏனைய துறைகளின் பொறுப்பாளர்கள், அரச அதிகாரிகள் மக்கள் குறைகளைக் கேட்டறிந்தனர். (24)

### நீர்த் தொட்டிகள் அமைப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதிப் பகுதியில் நியாப் திட்டத்தினரால் நீர்விநியோகத்துக்கான நீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

கட்சன் வீதிப் பகுதி மக்கள் நீர்த்தட்டுப்பாடு காரணமாக தூர இடங்களிலிருந்தே குடிநீர் எடுத்து வருகின்றனர். இந்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு கட்சன் வீதிப்பகுதிக்கு 300 மீற்றறுக்கு ஒரு தொட்டி விகிதம் 10 நீர் தொட்டிகளும் நீரை கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகிறது. இவ் வேலையானது இம்மாத இறுதிக்குள் முடிவடையும். (12)

# விளையாட்டுத் துறைசார் அபிவிருத்தியில் அலுவலர்கள் கவனம் செலுத்த வேண்டும்

## -உதைபந்தாட்ட இறுதி நிகழ்வில் கிளி.அரச அதிபர்

(அலுவலக செய்தியாளர்)

அபிவிருத்தியில் மனிதவள மேம்பாடே முக்கியமாகும் ஆற்றலை வளர்க்கும் செயற்பாடுகளில் விளையாட்டுத்துறை முக்கிய இடத்தைப் பெறுகின்றது முதன் முதலாக வடகிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் எமது மாவட்டம் வெற்றிபெற்றது குறித்து பெருமையடையும் அதே வேளையில், விளையாட்டு அபிவிருத்தியில் விளையாட்டு அலுவலர்கள் கல்வித்திணைக்கள அலுவலர்கள், மேலும் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

இவ்வாறு கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் தெரிவித்தார். வடகிழக்கு மாகாண சபையின் விளையாட்டு அமைச்சினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் (07.08.2004) கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் "பெண்கள் இன்று கல்வி, விளையாட்டு, முகாமைத்துவம் போன்ற வல்வேறு விடயங்களில் எமது மண்ணில் முன்னிலையில் திகழ்கின்றனர். இவர்களுடைய விளையாட்டுத் திறன் மேலும் உயர்ந்து சர்வதேசத்தில் எமது அடையாளங்களைப் பதிக்க வேண்டுமென அவர்களிடம் கேட்டுக்கொண்டார். விளையாட்டு சிந்தனை விருத்தியையும், விரைவாகச் சரியான முடிவை எடுக்கும் திறனையும் வளர்ப்பதற்குரிய மிகச் சிறந்த ஊடகமாகும் எனவே இந்த மண்ணில் விளையாட்டு அபிவிருத்தி அடைவதற்கு விளையாட்டு அலுவலர்களும் கல்வி அலுவலர்களும் முன்னின்று மேலும் உழைக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன் எனவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார். (சோ,கு)

# வவுனியாவில் நாட்டுப்பற்றாளர் நடேசனின் நினைவு நிகழ்வு

(செட்டிகுளம்)

மூத்த பத்திரிகையாளரும், நாட்டுப் பற்றாளருமான ஜி.நடேசனின் நினைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை உள்ளரங்கில் இடம் பெற்றது.

நிகழ்வு ஏற்பட்டு குழுத் தலைவர் சூ.ஞானப்பிரகாசம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது. வரவேற்பு உரையினை செய்தியாளர் மகாமுனி ஆற்றினார். தொடர்ந்து சிறிலங்காவின் ஊடகத் துறையின் இனப்பிரச்சினையின் இன்றைய நிலையும் என்ற தலைப்பில் மூத்த ஊடகவியளாளர் சிவராம் கருத்துப்பகிர்வை நடத்தினார். இதன் போது நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் தமது ஐயம் தொடர்பாக கேள்விகள் கேட்டனர். இதனைத் தொடர்ந்து கனேடிய தமிழ் வானொலியின் நேயர்கள் வட்டம் ஒன்று திரட்டி அனுப்பியிருந்த மூன்றரை இலட்சம் ரூபா பணத்தினை ஊடகவியலாளர் க. ரவீந்திரனால் ஜி.நடேசனின் மனைவியிடம் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து க.ரவீந்திரன் சிறப்புரை ஆற்றினார். இந்தநிகழ்வில் வன்னிபாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், விநோகராதலிங்கம், விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், மகளிர் பொறுப்பாளர் அலை மற்றும் கனேடிய தமிழ் வானொலியின் கலையகத்தைச் சேர்ந்த ஆத்மனும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (21)

# பரந்தன்-முல்லை பிரதான வீதியிலுள்ள முக்கிய பாலங்கள் புனரமைப்பு ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன்-முல்லை பிரதான சாலையில் உள்ள மிக முக்கியம் வாய்ந்த பாலங்கள் வீதி புனரமைப்பு அதிகார சபையினரால் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.




பரந்தன்-முல்லை பிரதான சாலையில் போக்குவரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்த பாலங்களை துரித கதியில் புனரமைப்புச் செய்துவரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தற்காலிக போக்குவரத்திற்கான பாதைகளை அமைத்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு புனரமைப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி வீதியில் அமைந்துள்ள மிகப் பெரியதும் பல ஆண்டுகள் பழமை வாய்ந்ததுமான கண்டாவளை, வெலிக்கண்டல் பாலத்தினையும் புனரமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பாலத்தினூடாக மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதைவிட இச்சாலையில் ஏற்கனவே இரண்டு பாலங் கள் புனரமைக்கப்பட்டுப் பாவனைக்கு திறந்து வைத்துள்ளமை தெரிந்ததே. (ச)

# துணுக்காய்ப் பிரதேசசபை தனியார் கட்டடத்திற்கு மாற்றம்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேச சபை தற்காலிகமாக பிரதேச செயலர் பணிமனைக்கு அருகில் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இயங்கி வருகின்றது

மேற்படி துணுக்காய்ப் பிரதேச சபையின் நிரந்தரக் கட்டடம் 1990ஆம் ஆண்டு சிறிலங்கா விமானப் படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி அழிவுக்குள்ளானது. அதனையடுத்து இதுவரை காலமும் காணி அலுவலருக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது என துணுக்காய்ப் பிரதேச சபை தொழில் நுட்ப அதிகாரி க.கணேசலிங்கம். தெரிவித்தார் (24)

# மல்லாவி மத்திய கல்லூரியில் கணினி அறை திறப்பு

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் நிர்மானிக்கப்பட்ட கணினி, ஒலி,ஒளி அறைகள் திறப்புவிழா நிகழ்வு அண்மையில் கல்லூரியின் தலைவர் திருமதி சோ.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. தேசியக் கொடியினை மல்லாவிப் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் புனிதன் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மா.தெய்வேந்திரம், பழைய மாணவர் சங்க செயலாளர் அரவிந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். கணினி அறையினை வலயக் கல்விப் பணிப்பாளரும், ஒளி,ஒலி அறையினை துணுக்காய் கோட்டக் கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி அவர்களும் திறந்து வைத்தனர். மற்றும் இந் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.(24)

### ஆசிரிய கலாசாலை மாணவர்கள் பரீட்சை

2004 கல்வியாண்டு ஆசிரிய கலாசாலை 2ஆம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை 21.08.2004 முதல் 28.08.2004 வரை நடைபெறவுள்ள தெனவும், முதலாம் வருட இறுதித்தேர்வு 30,31.08.2004 ஆகிய இரு தினங்களும் ஆசிரிய கலாசாலைகளிலும் நடைபெறவுள்ளதென பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர்கள் தெரிவித்துள்ளனர். (சோ.கு)

# படையினரின் பாதுகாப்பு நடைமுறைகளால் மக்களுக்குப் பாதிப்பு

# தெல்லிப்பளை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

**படையினரின் பாதுகாப்பு சூனியப் பிரதேச நடைமுறை காரணமாகப் பல நூற்றுக் கணக்கான விவசாயிகள் தம் விவசாய நிலங்களை இழந்து பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெல்லிப்பளை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.**

தெல்லிப்பளைப்பகுதியில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க நிலைகளை அண்மித்துள்ள விவசாய நிலங்களில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் பல விவசாயிகள்பலவேறு இராணுவக் கெடுபிடிகள் மத்தியிலும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் படையினர் பாதுகாப்பு வலயங்களில் முன்னரங்க நிலைகளில் இருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அப்பாலேயே மக்கள் நடமாடமுடியும் என்ற நடைமுறையைக் கடுமையாக அமுற்படுத்தியதுடன் இவ் 600 மீற்றர் நீளத்திற்கு உட்பட்ட பிரதேசத்தை பாதுகாப்புச் சூனியப் பிரதேசம் என பிரவேசத்தடை பதாகைகளையும் பொருத்தியுள்ளனர்.

படையினரின் சூனியப் பிரதேசப் பிரகடனத்தால் பாதுகாப்பு வலய முன்னரங்க நிலைகளில் இருந்து 600 மீற்றர் தூரத்துக்குட்பட்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடப் படையினர்முற்றாகத் தடைவிதித்துள்ளனர். இதனால் இப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட 600 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி இவ் விவசாயிகள் சங்கம் ஆட்சேபம் வெளியிட்டுள்ளது.(33)

## இனந்தெரியாதோர் தீ வைப்பு

யாழ். கொக்குவில் பூநாறி மரத்தடியில் சட்டவிரோதமாக இயங்கிவந்த மதுபான நிலையமொன்று இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

## ஈழநாத செய்திகளை மொழிபெயர்த்து கூறுமாறு படையினர் நிர்ப்பந்தம்

### பயணிகள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியூடாகப் பயணிக்கும் பயணிகள் வாசிப்பதற்கு "ஈழநாதம்" நாளிதழைப் படையினர் வழங்கி வருகின்றனர். குறிப்பாக, ஓரளவு சிங்கள மொழிப் பரிச்சயம் உள்ள பயணிகளை மறித்து உரையாடும் படையினர் அவர்களிடம் "ஈழநாதம்" பத்திரிகையினை வழங்கிச் செய்திகளை மொழிபெயர்த்துக் கூறுமாறு கோருகின்றனர்.

நேற்று முன்தினம் மதியம் இவ்வாறு படையினரிடம் அகப்பட்டுக் கொண்ட பயணி ஒருவர் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில், குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினர் தொடர்பாக நாளிதழில் வெளியாகும் செய்திகளை மொழிபெயர்த்துக் கூறுமாறு தன்னிடம் கோரியிருந்த தாகத் தெரிவித்தார். இதனால், தனது பொன்னான நேரத்தில் ஒரு மணித்தியாலத்தை வீணாகக் கழிந்துவிட்டதாகவும் அவர் ஆதங் கப்பட்டார். (27)

## உலக வங்கிப் பிரதிநிதிகள் கல்வி அதிகாரிகளுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளின் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக உலக வங்கிப் பிரதிநிதிகள் குழுவொன்று கல்வித்திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

கடந்த புதன் கிழமை நல்லூரில் உள்ள மாகாணக் கல்விப் பணிப்பாளரது பனிமனையில் இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது வலையக்கல்விப்பணிப்பாளர்கள், மற்றும் பாடசாலை வேலைகள் பொறியியலாளர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (27)

## விசர் நாய்க் கடிக்கிலக்காவோர் எண்ணிக்கை யாழ்.இல் அதிகரிப்பு

### கட்டாக்காலி நாய்கள் குறித்து மாநகர சபைக்கு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் கொழும்புத் துறை, பாசையூர், குருநகர் மற்றும் அரியாலை போன்ற பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இதனால் இப்பகுதிகளில் விசர்நாய்க்கடிகளுக்கு இலக்காவோர் தொகையும் அதிகரித்துள்ளன. இதுகுறித்து இப்பகுதிப் பொது மக்கள் யாழ்.மாநகர சபையினரிடம் முறையிட்டும் கூட இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் விசர் நாய்க்கடிகளுக்கு இலக்காகிச்சிகிச்சை பெறுவோர்தொகையும் அதிகரித்திருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

## வறிய மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் நூல்

### தமிழ் மாணவர் ஒன்றியம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் வறிய மாணவர்களுடைய நன்மை கருதி யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் பரீட்சை வழிகாட்டல் நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வாழும் மாணவர்களின், எதிர்வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஒரு தொகுதி பரீட்சை வழிகாட்டல் நூல்கள் வழங்கப்பட்டிருப்பதாக யாழ்மாவட்ட தமிழ் மாணவ ஒன்றியத்தின் இணைப்பாளர் எஸ்.கோகிலநாத் தெரிவித்தார். (33)

## வெடிமருந்து எடுத்துவந்ததாகக் கூறி கைது செய்த நான்கு மீனவரும் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி

(யாழ்ப்பாணம்)

குடாக் கடலினூடாக அபாயம் விளைவிக்கும் வெடிபொருட்களை யாழ். நகரப் பகுதிக்கு கடத்தி வந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட மீனவர்கள் நால்வரையும் பிணையில் செல்ல யாழ். மேலதிக நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதிநந்த சேகரன் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

அண்மையில் ஒரு கிலோ கிராம் நிறையுடைய ரீ.என்.ரி. வெடி பொருட்களை மீன்பிடி படகில் எடுத்துவந்து, குருநகரின் சீ-நோர் இறங்குதுறையூடாக கடத்தி நகரப் பகுதியினுள் கொண்டுவர முற்பட்டதாகக் கூறி அதே பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நால்வரும் படையினரால் சோதனையின் போது கைது செய்யப்பட்டிருந்தனர்.

யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்த இவர்கள் நீண்ட நாட்களாக பிணை அனுமதி வழங்கப்படாது யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளையில் அபாயம் விளைவிக்கும் வெடிபொருட்கள் சட்டத்தின் கீழ் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நிராகரித்த நீதிவான் "சாதாரண வெடி பொருள் கடத்தல்" குற்றச்சாட்டின் கீழ் இவ்வழக்கை விசாரணை செய்தார்.

"வெடிபொருள் கடத்தல்" தொடர்பாக சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க நியாதிக்கும் நீதவான் நீதமன்றிற்கு உள்ளதை தெளிவுபடுத்திய அவர், சந்தேக நபர்கள் நால்வரையும் 25ஆயிரம் ரூபா பெறுமதியான தலா இரு ஆட்பிணையில் செல்ல நீதவான் அனுமதித்துள்ளார்.

அத்துடன் வாரத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சந்தேக நபர்களை யாழ். பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவும் பணித்துள்ளார்.சந்தேக நபர்களின் சார்பாக சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா ஆஜராகினார். இதேவேளை, மீனவர்களது படகினை தடயப் பொருளாக தெரிவித்து விடுவிக்க பொலிசார் மறுத்துவிட்டனர். (27)

## அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வரும் பொதுநூலகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் உள்ள வறணி பொது நூலகம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கி வருகின்றது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மேற்படி நூலகத்திற்கு போதியளவு தளபாட வசதிகள் மற்றும் இட வசதிகள் என்பன காணப்படவில்லை. இதை விட இங்கு பயனுள்ள புத்தகங்கள், பத்திரிகைகள் என்பனவும் இல்லை.

இதனால் இந் நூலகமூடாக மக்கள் பூரண பயனைப்பெற முடியாத நிலை காணப்படுகிறது. எனவே இதைக் கவனத்தில் கொண்டு இந் நூலகத்திற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## இலவச மருத்துவ சேவை

(மன்னார்)

மன்னார் பொது வைத்திய சாலையில் மன்னார்வாழ் வோதயத்தின்அனுசரணையுடன் கொழும்பு அப்பலோ வைத்திய சாலை வைத்தியர்கள் நேற்று முன்தினம் இலவச் மருத்துவ சேவையை வழங்கியது.

(மி)

## ஆன்மீக அறநெறி வழிகாட்டல் கருத்தரங்கு

(மன்னார்)

மன்னாரில் அகில இலங்கை இந்து மாமன்றமும், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் இணைந்து நடாத்தும் ஆன்மீக அறநெறி வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

சித்தி விநாயகர் தேசியக் கல்லூரியில் இடம்பெற்ற இக் கருத்தரங்கிற்கு திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் தலைவர் தலைமை தாங்கினர். இவ் வைபத்தில் பலர் கலந்து கொண்டனர்.

(மி)

## மட்டக்களப்பில் குண்டுப் புரளி

மட்டக்களப்பில் கடந்த வியாழக்கிழமை மாலை ஏற்பட்ட குண்டுப்புரளி காரணமாக நகரத்தில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையிலுள்ள சரவணபவான் உணவு விடுதியின் முன்னாள் அநாதரவற்ற நிலையில் பை ஒன்று காணப்படவே பொது மக்கள் பொலிசாருக்கு கொடுத்த தகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்து சென்ற பொலிசாரும், குண்டுசெயழிழக்கும் பிரிவினரும், இராணுவத்தினரும் சுமார் இரண்டு மணிநேரம் வரை அவ்வீதியை பொதுமக்களின் போக்குவரத்திற்குத் தடைவிதித்திருந்தனர். பின்னர் குண்டு செயலிழக்கும் பிரிவினர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் பையை எடுத்துப் பார்த்த போது அது வெற்றுப்பையாகக் காணப்பட்டது. இதன் காரணமாக மட்டக்களப்பு நகரம் பெரும் பரபரப்பாக காணப்பட்டது.

## பழுதடைந்த வீதி குறித்து மாநகரசபை கவனம் செலுத்தவில்லை

### மக்கள் விசனம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காட்டுச் சந்தையின் பின்புற வீதி நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இதனால் இவ் வீதியூடாக போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்து யாழ்.மாநகர சபையினர் உரிய கவனம் செலுத்தவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# பண்டாரநாயக்க வழியில் சனாதிபதி சந்திரிகாவும்





உப்புல் ஜோசப் பர்ணாந்து (லங்காதீப)
தமிழில் : வடிவேல்

இன்று கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும் பல பலியெடுப்புக்கள் நடைபெற்றுள்ளன. அது யார் செய்தாலும் விடுதலைப்புலிகளாலேயே நடத்தப்படுவதாக அரச ஊடகங்கள் தம்பட்டமடிக்கின்றன. ஆனால், இந்த சமாதான காலத்திலும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் திடீரென இராணுவத்தால் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் நடந்தேறி வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளாலே மக்கள் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டுவிடுமா என்ற அச்ச நிலைக்குள்ளாகியுள்ளனர்.

நோர்வே அரசும் சில எச்சரிக்கைகளை விடுத்துள்ளது. பனிக்கட்டி போன்று உறைந்து போன நிலையிலிருந்த யுத்தம் தற்போது சூடுபிடித்து உருகி வழிந்தோடும் நிலையிலிருப்பதாக நோர்வேயின் தூதுவர் கூறியிருக்கிறார். அப்படியாயின் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் என்ன நடக்கும்?

அன்று இந்திய அமைதி காக்கும் படையினர் ஏனைய தமிழ்க் குழுக்களை தம்வசப்படுத்தி விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை ஆரம்பித்தனர். இன்று சிறிலங்கா இராணுவம் கருணாவை தம் கையில் வைத்துக் கொண்டு விடுதலைப்புலிகளுடன் பேரம் பேசுவதில் ஈடுபடுவதுடன் கருணாவை பகடைக்காயாகப் பயன்படுத்தி நாட்டில் யுத்தம் ஒன்றுக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடுகின்றது.

இவையனைத்துக்கும் சந்திரிகாவின் அரசே காரணமாகும். ஏனெனில், ஐ.தே.மு. அரசின் சமாதான முன்னெடுப்புக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை யோசனை பரிசீலனையில் இருந்தபோது சந்திரிகாவும் பங்காளியான ஜே.வி.பி.யும் ரணில் விக்கிரமசிங்க நாட்டை கூறுபோடப்போவதாகவும் புலிகளுக்கு நாட்டை பிரித்துக் கொடுக்கப்போவதாகவும் மக்கள் முன் விசமப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அத்துடன் நின்று விடாமல் தனது நிறைவேற்று அதிகாரத்தினால் அமைச்சுப் பதவிகளைச் சுவீகரித்து இறுதியில் ஆளும் அதிகாரத்தையும் சந்திரிகா கைப்பற்றினார்.

தனது பதவியையும் கட்சியின் ஆயுட்காலத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கில் வேறுவழியின்றி இவ்வாறானதொரு சூழ்ச்சியை அவர் ஏற்படுத்தினார்.

இவ்வாறான சூழ்ச்சிகளையே அவரது தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் அன்று மேற்கொண்டார். 1956ஆம் ஆண்டு அவர் பதவிக்கு வருவதற்காக அவர் செய்த சூழ்ச்சியானது முதலில் ஆளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும்.

அன்று ஐக்கிய பிக்குகள் முன்னணி என்ற ஒரு அமைப்பைத் தோற்றுவித்து, அவர்கள் மூலமாக சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவதற்கு அவர் திட்டம் வகுத்தார். அதற்காக அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த டட்லி சேனநாயக்காவை முதலில் சந்திக்கச் சென்றார். அச்சந்திப்பின்போது டட்லி சேனநாயக்க பண்டாரநாயக்கவின் ஐக்கிய பிக்குகள் முன்னணியின் கருத்துப்படி சிங்களத்தை அரச கரும மொழியாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் நாடும் அழிவுக்குட்படுவதோடு தாமும் அழிவுக்குள்ளாக நேரிடும் என்று சிந்தித்தார். அதனால், அவர்களின் கருத்துக்கு செவி சாய்க்காமல் தாமும் அதில் பங்கேற்க மறுப்புத் தெரிவித்தார். ஆனால், பிக்குகளின் கருத்துக்கு பண்டாரநாயக்க பாய்ந்தடித்துக் கொண்டு சம்மதம் தெரிவித்தார். சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கும் திட்டத்தினால் தமது செல்வாக்கைப் பண்டாரநாயக்க உயர்த்திக் கொண்டதுடன் ஆளும் அதிகாரத்தைக் கைப்பற்றும் முக்கிய துரும்பாகப் பயன்படுத்திக் கொண்டார். முன்னர் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் சம அந்தஸ்து வழங்க எண்ணியிருந்த பண்டாரநாயக்க பின்னர் இப்படியொரு திட்டத்தைக் கொண்டுவர இணங்கியது முழு விருப்பத்துடன் அல்ல. அந்நேரம் ஆளும் அதிகாரத்தைக் கைப்பற்ற அவருக்கு வேறு வழியிருக்கவில்லை. ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அவர் தனது பழைய நிலைக்கு மாற உத்தேசித்திருந்தார். எனினும், அது வாய்க்கவில்லை. அவர் சிங்களத்தை அரச கரும மொழியாக்குவதை காலந்தாழ்த்தி வந்தார். அவ்வாறு செய்வதால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இன்னலைத் தடுக்க தந்தை செல்வ நாயகத்துடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள முனைந்தார். எனினும் அதற்கு சிங்களப் பிக்குகள் முன்னணியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இறுதியில் அவரால் உருவாக்கப்பட்ட பிக்குகள் முன்னணியாலேயே அவர் சிறை வைக்கப்பட்ட நிலைக்குள்ளானார். சுருக்கமாகக் கூறினால், அவர்கள் பண்டாரநாயக்கவுக்கு முழு எதிர்ப்பைக்காட்டினர்.

இதனைப் பின்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பின்வருமாறு குறிப்பிட்டார். "சிங்களத்தை அரச கரும மொழியாக்கல் தொடர்பான மசோதாவை பாராளுமன்றில் சமர்ப்பிக்க சிறுபான்மைக் கட்சியினரையும் ஐ.தே.க. வினரையும் சந்தித்து உரையாடவிருந்த அன்று அதற்கு முன்பாகவே இம் மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பிரபல பிக்குமார்கள் மூவர் பண்டாரநாயக்கவை சுற்றியிருந்து பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களில் முதலாமவர் மெத்தானந்த. அடுத்த இருவர் இன்றும் பிக்குகள் முன்னணித் தலைவரான மாபிட்டிக புத்தரக்கித தேரரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகரும் சிங்களம் மட்டும் என்ற இயக்கத்தின் தலைவருமான பத்தேகம விமலவன்சதேரரும் ஆவர். இவர்கள் இருவரும் பொதுத் தேர்தலின்போது பண்டாரநாயக்கவின் கட்சியில் முக்கிய ஆதரவளித்தவர்கள் ஆவர். இவர்கள் கட்சிக்குள் இருந்து சேவை செய்தமையால் பண்டாரநாயக்கவின் பலம் மேலும் அதிகரித்தது. இதன் மூலம் பண்டாரநாயக்கவின் சிங்களம் மட்டும் கொள்கையிலிருந்து விலகுவதைத் தவிர்க்க முடிந்தது.'' என ஜே.ஆர். குறிப்பிட்டிருக்கின்றார்.

இன்று சந்திரிகாவின் நிலைப்பாடும் இவ்வாறானதொரு சிக்கலான நிலையாகியிருக்கிறது. உண்மையில் சமாதானத்துக்காக அவர் தம் அரசியல்வாதிகளை ஈடுபடுத்தி சமாதானத்தை எட்டவிருப்பம் உள்ளவராகவே இருக்கின்றார். 2001ஆம் ஆண்டு அவரின் கட்சி தேர்தலில் தோல்வியுற்றாலும் பின்னர் மீண்டும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற ஐ.தே. முன்னணியின் குறைபாடுகளைக் குறிப்பாக, நாட்டின் பாதுகாப்பின்மை பற்றியும் நாட்டைப் பிரித்துக் கொடுப்பதாகக் கூறியும் பிரச்சாரங்களை மேற்கொண்டார். அதன்படி ஜே.வி.பி. யினருடன் இணைந்து ஆட்சியையும் கைப்பற்றிவிட்டார். முக்கியமாக பண்டாரநாயக்கவுக்கு பிக்குகள் முன்னணி ஒத்துழைப்பு நல்கியதைப்போன்று இன்று சந்திரிகாவுக்கு ஜே.வி.பி.யினர் பக்கபலமாக நிற்கின்றனர்.

அவர்கள் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு சமமானது என்றும், சமாதானத்தினால் நாடு பாரிய பிரச்சினைக்குள்ளாகியிருப்பதாகவும் மக்கள் முன் பிரச்சாரம் செய்கின்றனர். இதனாலேயே 2001 ஆம் ஆண்டில் தமக்கு வழங்கப்பட்ட நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டு சந்திரிகா அமைச்சுக்கள் மூன்றையும் கைப்பற்றினார். அத்துடன் ஆட்சியதிகாரத்தையும் கைப்பற்றினார். ஜே.வி.பி.யினரின் விருப்பத்துக்கு ஏற்ப சந்திரிகா தொடர்ந்து செயற்படுவாரேயானால், பண்டாரநாயக்க பிக்குகளுக்கு கட்டுப்பட்டது போன்று சந்திரிகாவும் ஜே.வி.பி. யினருக்கு கட்டுப்பட வேண்டியேற்படும் அன்றியும் சமாதானம் குழம்பினால் நாட்டின் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே, தந்தையான பண்டாரநாயக்கவைப் போன்று சந்திரிகாவும் சிறைவாச நிலைக்குத் தள்ளப்படுவாரா என்பது விரைவில் தெரியும்.

## ஆடி இறுதிச் செவ்வாய் யாகப் பெருவிழா

இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் ஆடி இறுதிச் செவ்வாய் யாகப்பெரு விழா நாளை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 11.00 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 11.00மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று, அலங்கரிக்கப்பட்ட எருது வாகனத்தில் அம்பாள் வெளி வீதி உலா இடம்பெற்று அம்பாள் அடியார்களுக்கு அருள்பாலிப்பா அதைத் தொடர்ந்து 1.30 இற்கு அன்னதானம் நடைபெறும் என ஆடிச்செவ்வாய் யாக விழா உபயகாரர்கள் அறியத் தந்துள்ளனர்.

## கிளிநொச்சி காந்தி நிலையத்தில் 110 சிறுவர்கள் பராமரிப்பு

(கிளிநொச்சி)

அவுஸ்திரேலியா, மலேசியா, நியுசிலாந்து நாடுகளின் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரால் நடாத்தப்படும் காந்தி நிலையத்தில் தாய், தந்தையரை இழந்த தாயை அல்லது தந்தையை இழந்த, வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 175 சிறுவர்களும் இளைஞர்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றதாக நிலையத்தில் அண்மைக்கால நிலவர அறிக்கையில் இருந்து அறிய முடிகின்றது.

5 தொடக்கம் 13 வயது வரையான 110 சிறுவர்களும் 14 தொடக்கம் 26 வயது வரையான 65 இளைஞர்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 152 மாணவர்களும் தொழில் நுட்பக்கல்வியினை கற்கும் ஒருவரும் இதில் அடங்குவர். 1956 ஆம் ஆண்டு க.சி. வேலாயுதம்பிள்ளை என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இவ் நிலையத் தினை 1990 ஆம் ஆண்டில் தமிழர் புனர்வாழ்வுக்கழம் பொறுப்பேற்றுக்கொண்டது. இங்கு 22 பணியாளர்களும் 10 ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். (15)

## கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயத்தில் நடைபெற்ற கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி 2004 இல் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ள பாடசாலைகளினதும் மற்றும் வெளியிட்ட சஞ்சிகைகளினதும் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| பாலர் மேற் பிரிவு | | |
| 1ஆம் இடம் | வெண்புறா | கிளி/தம்பிராசபுரம் அ.த.க |
| 2ஆம் இடம் | மலரும்மொட்டுகள் | கிளி/வன்னேரிக்குளம் ம.வி |
| 3ஆம் இடம் | விடிவு | கிளி/பரந்தன் இ.ம.வி. |
| இடை நிலைப் பிரிவு--1 | | |
| 1ஆம் இடம் | தளிர் | கிளி/தருமபுரம் ம.வி |
| 2ஆம் இடம் | விடிவெள்ளி | கிளி/பரந்தன் இ.ம.வி |
| 3ஆம் இடம் | ஞானக்கதிர் | கிளி/புனித பற்றிமா றோ.க |
| இடை நிலைப் பிரிவு--2 | | |
| 1ஆம் இடம் | சிறகுகள் | கிளி/பரந்தன் இ.ம.வி |
| 2ஆம் இடம் | அகரம் | கிளி /புனிதபற்றிமா றோ.க |
| 3ஆம் இடம் | மலரும்மலர்கள் | கிளி/வன்னேரிக்குளம் ம.வி |
| இடை நிலைப் பிரிவு--3 | | |
| 1ஆம் இடம் | விடியலைத் தேடி | கிளி/மத்தியகல்லூரி |
| 2ஆம் இடம் | அனந்தம் | கிளி/புனிதபற்றிமா றோ.க |
| 3ஆம் இடம் | புலரும் பொழுது | கிளி /அக்கராயன் அ.த.க |
| கல்லூரி நிலை | | |
| 1ஆம் இடம் | உதயம் | கிளி/தருமபுரம் ம.வி |

(சோ.கு)



# கடந்த வாரத்தில்

**29.07.2004-04.08.2004**

## 29.

★அல்-ஹைதா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த மூத்த தலைவர்களில் ஒருவரான அகமது சுல்தான் பாகிஸ்தான் இராணுவப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

★ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப்படையினருக்கும் ஈராக்கிய ஆயுதக் குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 10 ஈராக்கியர்கள் பலி. 6பேர் காயம்.

★ம.ம.மு.தலைவர் பெ.சந்திரசேகரன் தி.மு.க.தலைவர் மு.கருணாநிதியை தமிழகத்தில் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான தற்போதைய நிலைப்பாடு பற்றி கலந்துரையாடினார்.

## 30

★பெல்ஜியத்தின் தொழில் துறை நகரமான புறூஸ்லெஸ்ஸில் காஸ் தொழிற்சாலையில் விநியோகக்குழாய் கசிவை சீர்செய்ய முயன்ற வேளை ஏற்பட்ட தீ தொழிற்சாலைக்குள் பரவியதில் 15பேர் பலி, 120 பேர் எரிகாயம்.



பத்திரிகையாளர் சந்திப்பில்

★ஈராக்கிற்கு விஜயம் செய்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஈராக்கின் இடைக்கால நிர்வாக அதிகாரிகளையும் அமெரிக்கப்படைத்தளபதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

★நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கேசன் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து சமகால அரசியல் நிலவரம் பற்றிக் கலந்துரையாடினார்.

★பாகிஸ்தான் தென்மேற்கு மாகாணத்தில் பலுகிஸ்தான் நகரில் அடையாளம் தெரியாத துப்பாக்கி நபர்கள் இராணுவ வாகனமொன்றைத் தாக்கியதில் 6 இரா்ணுவத்தினர் பலி, 2பேர் காயம்.

## 31

★சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை தாய்லாந்தில் சந்தித்து சமகாலப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

## 01

★பாக்தாத்தில் அமெரிக்கப் படையினர் கூடியிருந்த 5 தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 15பேர் பலி, 10 இற்கு மேற்பட்டோர் காயம்.



தேவாலய தாக்குதலின் பின்

★ஈராக்கில் மொசூல் நகரில் பொலிஸ்நிலையம் மீது இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதலில் 5 பொலிசார் பலி, 50 இற்கு மேற்பட்டோர் காயம்.



மொசூலின் தாக்குதல்



தீ விபத்தில்

★தென் அமெரிக்க நாடான பராகுவேயின் தலைநகர் அகன்சியா நகரில் உள்ள வணிக வளாகமொன்றில் இடம் பெற்ற பாரிய தீ விபத்தில் 283 பேர் உடல் கருகிப் பலி, 200இற்கு மேற்பட்டோர் காயம்.

★ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற தொடர்குண்டுவெடிப்புக்களில் இருவர் கொல்லப்பட்டனர்.



குண்டுவெடிப்பில் எழும் புகைமண்டலம்


## 03.

★ஈராக்கில் உள்ள துருக்கியில் சாரதிகள் அமெரிக்கப்படையினருக்குத் தேவையான உணவு முதலியவற்றை எடுத்துச் செல்வதற்கும், அமெரிக்கப் பகுதியில் பணிபுரிவதற்கும் ஆட்சேபம் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர்.

★அமெரிக்காவின் டெக்ராஸ் மாகாணத்தில் வீடொன்றின் மீது சிறியரக விமானம் மோதியதில் பயணம் செய்த 6பேர் பலி.

★கொலம்பியாவில் பொலிசார் ரோந்துப்பணியில் ஈடுபட்டவேளை தீவிரவாதிகள் வெடிகுண்டு வீசித் தாக்கியதில் 9பொலிசார் பலி, 3பேர் படுகாயம்.

★புதன் கிரகத்தின் மர்மங்களை அறிவதற்காக நாஸாவின் மெசன்சர் செயற்கைக்கோள் விண்ணிற்குப் புறப்பட்டது.



விண்ணுக்கான பயணத்தில்

★இங்கிலாந்தின் வடக்கு லண்டன், ஹேட்போட்சிறி, லூதன், பிளக்போன் நகரங்களில் சந்தேகத்தின் பேரில் 13 பேர் கைது.

## 04.

★ஈராக்கில் பணயக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட நா்ன்கு ஜோர்தானியர்களையும் ஈராக்கியத் தீவிரவாதிகள் விடுதலை செய்தனர்.

★சிம்பாவேயின் தலைநகர் ஹராரேயில் இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டதில் 70 பயணிகள் காயம்.

★சீனாவில் மழலையர் பள்ளி காவலாளி ஒருவர் 15 குழந்தைகளையும், இரண்டு ஆசிரியர்களையும் கத்தியால் கிழித்தும், குத்தியும் வெறியாட்டம்.

★இந்திய அரசின் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் இஸ்லாமிய தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 9 பொலிசார் பலி, பலர் காயம்.

# கிளினிக் நாட்களில் மேலதிக பேருந்து சேவைக்கு வேண்டுகை

கிளினிக் நாட்களிளாவது கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி செல்ல பயணிகள் பேருந்து சேவை ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு பொது மக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை கிளினிக் நாட்களில் சிகிச்சை பெற வருவோர் சிகிச்சையை முடித்துக்கொண்டு பேருந்துக்காக மதியம் தவம் கிடக்கவேண்டிய அவலநிலை காணப்படுகின்றது. 50 இற்கும் மேற்பட்டோர் இவ்வாறு காத்துக் கிடப்பதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் நண்பகல் அளவில் பயணிகள் பேருந்து சேவையொன்றை ஏற்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்டோருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி முரண்பாட்டின் தீவிரமே சனாதிபதியின் தலைமைப் பதவி விலகலுக்கு காரணம்

### - 'ராவய' வாரஇதழ் கருத்து

(கொழும்பு)

தமக்கிருக்கும் பணிகளின் பழுகாரணமாகவேதான் ஐ.ம.சு கூட்டணியின் தலைமைப் பதவியிருந்து இராஜினாமாச் செய்ததாக சந்திரிகா தெரிவித்திருப்பினும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் சூடு பிடித்திருக்கும் கருத்து முரண்பாடுகளின் வெளிப்பாடே அது என ராவய சிங்கள வார இதழ் கருத்து வெளியிட்டுள்ளது.

நாட்டின் அரசியல் நடவடிக்கைகளுக்கு உயிரூட்டுவதும், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதுவும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதுமே சந்திரிகாவின் எண்ணமாகும். எனினும் அதற்கு ஜே.வி.பி யினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இடைக்கால நிர்வாக சபையுடன் இறுதிப் பேச்சுவார்த்தையும் நடத்த சந்திரிகா எண்ணியிருந்தாலும் விடுதலைப் புலிகள் அதற்கு இணங்கவில்லை. ஆனால் இடைக்கால நிர்வாகசபை அதிகாரம் வழங்கப்படுமாயின் தாம் கூட்டணியிலிருந்து விலகுவதாக ஜே.வி.பி. எச்சரித்திருந்தது.

இது தொடர்பாக கடந்த வாரம் 3 மணிநேர கடும் விவாதம் நடைபெற்றது. ஆயினும் ஊடகங்கள் சனாதிபதியினதும் ஜே.வி.பியினதும் கருத்து ஒரே மாதிரியானதாகவே இருப்பதாகச் செய்திகள் வெளியிட்டன அதனால் சனாதிபதி மிகவும் ஆத்திரமடைந்தார் ஊடகத்துறை, சிறிலங்க சுதந்திரக்கட்சி அமைச்சர்களிடம் இருக்கும்போது ஜே.வி.பி இவ்வாறான செய்திகளை எவ்வாறு வெளியிட முடியும் என சந்திரிகா கிளர்ந்தெழுந்துள்ளார். இதுவும் அவர் இரஜினாமா செய்ததற்கு ஒரு காரணமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தவறை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஊடகங்கள் வேறு அறிக்கையினை வெளியிட வேண்டி ஏற்பட்டது. இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் அரசின் நிலைப்பாட்டில் தவறான செய்தியறிவிக்கப்பட்டதற்கு சந்திரிகாவும் மன்னிப்புக்கோர நேர்ந்தது.

இது தொடர்பாக தி.மு ஜயரத்ன தெரிவித்திருப்பதாவது சனாதிபதி நாட்டின் தலைவி என்பதால் கூட்டணியில் இருக்க வேண்டியது அவசியமல்ல என்றும அவர் விரும்பினால் ஐ.தே.க வினருடனும் கூட்டுச்சேர அதிகாரம் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி பதவியிலிருப்பது ஜே.வி.பியினரின் வாக்குகளால் அல்ல என்பது சனாதிபதியின் நிலைப்பாடு என்றும் இந்தவகையில் கட்சிக்குள் பெரும் முறுகல் நிலை தோன்றியிருப்பதற்கு மேலும் பல காரணங்கள் இருப்பதாகவும் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

# அரச ஊடகங்களின் தரத்தை உயர்த்த சனாதிபதியால் விசேட குழு நியமனம்

அரச ஊடகங்களின் தரத்தை உயர்த்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சனாதிபதி விசேட குழு ஒன்றை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் - குமாரி கூரே விடயம் தொடர்பாக அரசாங்க ஊடகங்கள் நடந்து கொண்ட விதம் குறித்து சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. இந்த விடயத்தில் அரசாங்க ஊடகங்கள் மிகவும் தரம் தாழ்ந்து செயற்பட்டிருப்பதாக சனாதிபதியும் கருத்து வெளியிட்டுள்ளார். இந்த நிலையிலேயே அரசாங்க ஊடகங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் அவற்றின் தரங்களை மேம்படுத்துவது தொடர்பில் இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் அநுர பிரியதர்சன யாப்பா, ரெஜினோல்ட் கூரே, ஏக்கநாயக்க ஆகியோர்அங்கம் வகிக்கின்றனர்.

ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைகளில் இந்தக் குழு அரசாங்க ஊடகங்களின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இந்த குழு தனியார் ஊடகங்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (32)

# சனாதிபதி நிலைப்பாட்டில் அடிக்கடி மாற்றம் பொதுமக்களைத் தவறாக வழிநடத்தவும் முயற்சி

## -ஐக்கிய தேசியக்கட்சி கண்டனம்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தியமைக்காக சனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

கட்சியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில்;

24மணித்தியாலத்தில் 3 தடவைகள் சனாதிபதி தனது நிலையில் இருந்து மாறியுள்ளார்.

சனாதிபதி செயலகத்தில் இருந்து பிந்திக்கிடைத்த தகவலின்படி விடுதலைப்புலிகளின் உத்தேச இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்ற நிலையே சனாதிபதி கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது.

இது வாழ்க்கைச் செலவு, எண்ணெய்விலை, உரமானியம், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு போன்ற உறுதியற்ற முன்னுக்குப்பின் முரணான குழப்பம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

காலையில் காட்டும் தோற்றம் இரவில் மாற்றம் அடைந்து விடுகின்றது. இவ்வாறு தவறாகப் பொதுமக்களை வழிநடத்த சனாதிபதிக்கு என்ன உரிமை இருக்கின்றது. சமாதான நடவடிக்கை விடயத்தில் தடுமாற்றமான நிலையைக் கொண்டிருப்பதாக சனாதிபதி முழுநாட்டு மக்களிடமுமே மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது..

## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

அனுபவம் வாய்ந்த சிங்கள, ஆங்கில (தமிழ் மொழிக்கு) மொழிபெயர்ப்பாளர்கள் தேவை.
உணவுடன் கூடிய தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். ஊதிய விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயதெல்லை:- 30இற்கு மேல்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

விண்ணப்ப முடிவுத்திகதி:- 18.08.2004

சுயவிபரம் அடங்கிய தங்கள் விண்ணப்பங்களைத் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

விளம்பர இல-60
ஈழநாதம் பணிமனை,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

(4901)


## வன்னி நெட் கபே
Vanni Net Cafe

உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது



- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பாராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.

அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச(NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




## கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)


## 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தாயின் மடியில்
10
*
02
*
1974



இறைவன் மடியில்
09
*
08
*
1998

### திருமதி.ஜெயலட்சுமி

உடுத்துறை வடக்கு தாளையடி

எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு
என்றும் மறைந்திடாதம்மா.

த.முகவரி
ஆ.சிவபால சுப்பிரமணியம்
5ஆம் வட்டாரம்
இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. (4888)

தகவல்
மகன்
ஜெயலக்ஷமன்

## விசாரணை

( கொழும்பு)

சப்பாத்து தயாரிப்பாளருக்கு பாசலில் வந்த கைக்குண்டு தொடர்பான விசாரணைகளை தெமட்டகொட பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியைச் சேர்ந்த சப்பாத்து தயாரிப்பாளர் ஒருவருக்கு சப்பாத்துப் பெட்டி ஒன்றில் கைக்குண்டு ஒன்று பாசலில் வந்துள்ளது. இவரது .மகன் பெண் ஒருவரை காதலித்துக் கைவிட்டதை அடுத்தே இக்கைக்குண்டு பாசலில் அவருக்கு வந்துள்ளதாக தெமட்ட கொட பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## சீமெந்தின் விலையை அதிகரிக்க மறுப்பு

சீமெந்து உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனங்கள் நாட்டில் சீமெந்து விலையை அதிகரிப்பதற்கு விடுத்த கோரிக்கையை அமைச்சர் ஜெயராஜ் பர்னான்டோ புள்ளே முற்றாக நிராகரித்துள்ளதுடன் பொதுமக்களின் நலன் கருதியே இத் தீர்மானங்களை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

## அரசியல் பழிவாங்கல்களை ஆராய விசாரணைக்குழு

(கொழும்பு)

தொழில்பயிற்சி தொழில்நுட்பக் கல்வியமைச்சில் இடம் பெற்றதாக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் குறித்து விசாரணை செய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழுவிற்கு பிரதியமைச்சர் துமிந்ததிசாநாயக்க தலைமை தாங்குகின்றார்.2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 2004ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை இந்த அமைச்சிலும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களிலும் அரசியல் பழிவாங்கல்கள் இடம் பெற்றதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான எந்தவித முறைபாட்டையும் அல்லது மேன் முறையீட்டையும் இந்த மாதம் 30ஆம் திகதி வரை இக் குழுவிடம் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## பதவி நீக்கம்

(கொழும்பு)

அனுராதபுரத்தில் தலாவ பிரதேச சபையின் தலைவர் சுனில் மென்டிஸ் வடமத்திய மாகாண முதலமைச்சரினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பிரதேச சபையின் சட்டதிட்டங்களை மீறினார் என்றும், தமது அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்தாரென்றும் சுனில் மென்டிஸ்சிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவரது வெற்றிடத்திற்கு பிரதேச சபையின் உதவித் தலைவர் எஸ்.எம் குசுமாவதி நியமிக்கப்பட்டுள்ளார்.

# பெண்களிடம் கொள்ளையிட்ட இராணுவச் சிப்பாய் கைது

வீதியிகளில் தனிமையாகச் செல்லும் யுவதிகளிடம் இருந்து தங்க நகைகளைக் கொள்ளையிட்டு வந்த கொவுவல இராணுவ முகாமைச் சேர்ந்த கோப்ரல் ஒருவரை ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் பத்து வருடங்கள் இராணுவத்தில் கடமையாற்றியுள்ளார்.கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் இக்கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிசார் கூறியுள்ளனர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

புதுக்குடியிருப்பு "தீபன் மருந்தகம்" நாகேந்திரம் ஜெபமலர் (சின்னமலர்) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவனுமாகிய

### நா.மேரிபஸ்ரியன்

க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்திபெற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியதையிட்டு மனம் மகிழ்ந்து பாராட்டுவதுடன் இறையாசியுடனும் மாவீரர் நல்லாசியுடனும் எதிர் காலத்தில் சிறந்த கல்விமானாகத் திகழ எம் நெஞ்சம் நிறைந்த இனிய வாழ்த்துக்களால் வாழ்த்துகின்றோம்.

நா.செல்வம்
"அமிர்தாலயம்"
சுதந்திரபுரம் மத்தி,
உடையார்கட்டு,
தமிழீழம்.

*சித்தப்பா குடும்பத்தினர்.*

(4887)

## கணக்காய்வு முகாமையாளருக்கான விண்ணப்பம் கோரல்

வவுனியாவில் இயங்கி வரும் கணக்காய்வு நிறுவனம் அதன் கிளிநொச்சிக் கிளைக்கு கணக்காய்வு முகாமையாளரைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

தகைமை:-

01. ஓய்வு பெற்ற கூட்டுறவுப்பொதுமுகாமையாளர்
அல்லது
02.ஓய்வு பெற்ற கூட்டுறவுக்கணக்காளர்.
அல்லது
03. ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்.

மேற்படி தகைமை உள்ளோர்கள் விண்ணப்பங்களை சுயவிபரம் கொண்டதாக தயாரித்து, கீழ்க்காணும் முகவரிக்கு 20.08.2004இல் அல்லது அதற்கு முன்னதாக எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்விற்கான திகதி தகுதியானவர்களுக்கு மட்டும் பின்னர் அறிவிக்கப்படும்.


பத்திரா அன்கோ,
கிருஸ்ணன் கோவிலடி வீதி,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

(4880)

## வீரவணக்கம்

### 03ஆம் ஆண்டு நினைவலைகளில்.....

தாயின் மடியில்
17
*
06
*
1969



தாயக மண்ணில்
09
*
08
*
2001

தமிழீழ தேசியத்துணைப்படைவீரர்

### சூ.விமலதாஸ்

பெரியகுளம், கண்டாவளை

பால மோட்டைப் பகுதியில் 09.08.2001 அன்று சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"

(4884)

- பா.உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை -

# கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் கீழ்

# தகுதி இழக்கச்செய்யும் அதிகாரத்தை வழங்குக!

## - இந்திய தேர்தல் ஆணையகம் அரசிடம் மனு

(புதுடில்லி)

**கட்சித் தாவல் தடுப்பு சட்டத்தின் கீழ் பா.உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி இழக்கச் செய்யும் அதிகாரத்தைத் தமக்கு வழங்குமாறு தேர்தல் ஆணையகம் வலுவான வேண்டுகோளினை மத்தியரசிடம் விடுத்துள்ளது.**

தற்போது இந்த அதிகாரம் மக்களவைச் சபாநாயகர், மாநிலங்களவைத் தலைவர்களிடம் உள்ளன.தேர்தல் அதிகாரிகளிடமுள்ள அதிகாரங்கள் சர்ச்சையை உருவாக்கி வருவதுடன் மேலும் நீதிமன்றங்களில் தேர்தல் ஆணையம் மீது வழக்குத் தொடுக்கும் நிலையும் உருவாகிவிட்டது. கட்சித் தாவல் தடுப்புத்தொடர்பான விடயங்களில் ஆணையத்தின் கருத்தின் பேரில் குடியரசுத் தலைவராலோ, மாநில ஆளுனராலோ எட்டப்படும் முடிவுகள் பொது மக்களின் பெரும் மதிப்பையும் ஏற்புடமையினையும் பெற்றிருப்பதாகக் கூறியுள்ளது. இலஞ்ச ஊழல் குற்றம் செய்த நபரைப் பதவி இழக்கச் செய்யும் நடைமுறையை விரைவு படுத்தும் நோக்கில் குடியரசுத் தலைவர்களுக்கு இது தொடர்பான வழக்குகளை அனுப்பி வைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்க வேண்டுமென்றும் பல்கிப்பெருகி வரும் தீவிரமில்லாத அரசியல் கட்சிகளைக் கட்டுப்படுத்த அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும், பதிவு அகற்றலும், அதிகாரத்தையும் தேவையான உத்தரவுகளையும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தையும் அறிமுகபடுத்த வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுள்ளது.



இந்தியாவில் புதிதாக தயாரிக்கப்பட்ட அர்ஜுன் ரக டாங்கி.

# இந்தியாவில் எயிட்ஸ் நோயாளிகளிடம் ஆராய்ச்சி நடத்த அமெ. பல்கலை முடிவு

(சென்னை)

தமிழ்நாடு ஆந்திராப்பிரதேசம், கர்நாடகம், மகாராஸ்ரம் ஆகிய மாநிலங்களில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களிடமும், இந் நோயைத் தடுப்பது குறித்தும் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி நடத்த முடிவு செய்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்திற்கு 21 இலட்சம் டொலர்களை அமெரிக்கத் தொழில் நிறுவனம் வழங்கியுள்ளது. மூன்று ஆண்டுகள் இந்த ஆராய்ச்சியின் பணிகளுக்காகவே இந்த நிதியுதவி வழங்கப்பட்டிருப்பதாக அப்பல்கலைக்கழக செய்திக்குறிப்புக் கூறியுள்ளது.

# இந்தியாவின் 170 மாவட்டங்களில் பிறப்பு வீதத்தைக் குறைக்கக் கோரிக்கை

## -ம.அர.சு மாநில அரசுகளிடம் விடுத்தது

(புதுடில்லி)

பீகார். உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், ஜார்கண் உள்ளிட்ட 170 மாவட்டங்களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த மத்தியரசு திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது. 2010 ஆம் ஆண்டுக்குள் இந்த மாவட்டங்களில் பிறப்பு விகிதத்தை 2:1 என்ற வீதமாக கொண்டுவரும் பெரிய திட்டத்தை மத்தியரசு மாநில அரசுகளைக் கோரியுள்ளது. தற்போது இம் மாநிலங்களில் இந்த விகிதம் 3:4 ஆகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா-பாக்கிஸ்தான் பேச்சுவார்த்தை 10,11 இல் பாகிஸ்தானில நடைபெறும்

(புதுடில்லி)

எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுக்களைப் பாகிஸ்தானில் நடத்த முன்வந்துள்ளன.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்தில் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், போதைப்பொருள்தடுப்பு, எல்லைப்பகுதிகளில் ஊடுருவல் பற்றியே இருநாடுகளும் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளன.

இந்தியா-பாகிஸ்தானின் விரிவான பேச்சுகளில் இந்தப் பேச்சுவார்த்தை ஒரு பகுதியாகும்.

அத்துடன் இந்தப் பேச்சுவார்த்தைகளில் லஸ்கரியதொய்வா, ஜேசியமுகமது தீவிரவாத அமைப்புக்கள், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் போன்றவை பற்றியும் விவாதிக்கப்படவுள்ளன.

பாகிஸ்தான் வசமுள்ள ஆசாத் காஷ்மீரில் இந்த அமைப்புக்களின் முகாங்களை அகற்ற வேண்டுமென்று இந்தியத் தரப்பில் வலியுறுத்தப்படும் என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ள மத்திய உள்துறை செயலா வீரேந்திரசிங் நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளார். இவர் பாகிஸ்தான் உள்துறை அமைச்சருடன் மேற்கூறபட்ட விடயங்கள் பற்றி விவாதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குற்றப் பின்னணியுடையவர்கள் தேர்தலில் போட்டியிடத் தடைவிதிப்பது விரும்பத்தக்கது

## இந்.உள்துறை இணை அமைச்சர்

(புதுடில்லி)

குற்றப்பின்னணியுடையவர்கள் உயர் பதவிகளில் வகிப்பது குறித்து அனைத்துக் கட்சிக்கூட்டமும் நடத்துவது பற்றி மத்தியரசு ஆலோசித்து வருவதாக உள்துறை இணை அமைச்சர் சிவராஜ் பட்டேல கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தேர்தல் ஆணையம் முன்வைத்துள்ள தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து முடிவெடுக்கவும் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் உதவும் என்றும் அவர் கூறியுள்ளார்.

குற்றப்பின்னணியுடையவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதிப்பது விரும்பத்தக்கது. என்றாலும் இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதில் சிக்கல்கள் இருப்பதால் அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து ஒற்றுமை அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அயோத்திப் பிரச்சினைக்கு நீதிமன்று மூலமே தீர்வு

## இந்திய மத்தியரசு அறிவிப்பு

(புதுடில்லி)

அயோத்திப் பிரச்சினைக்கு நீதிமன்றம் மூலமே தீர்வு காணப்படும் என்று மத்தியரசு கூறியுள்ளது. சமரசத் தீர்வு ஏற்பட்டாலும் நீதிமன்றத்தின் ஒப்புதல் அவசியம் என்றும் கருத்துக் கூறியுள்ளது.

இதனை நேற்று உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இதேவேளை சிக்கலான அயோத்திப் பிரச்சினைக்கு நீதிமன்றத் தீர்ப்பு அல்லது. பாராளுமன்றில் புதிய சட்டம இயற்றுதல் அல்லது சம்பந்தப்பட்ட இரு தரப்பினரிடையே பரஸ்பர உடன்பாடு காணுதல் என்று முன்னாள் வாஜ்பாய் அரசு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கார்கில் போரின்போது இந்.இராணுவத்திற்கு இழப்புக்கள் அதிகமென்கிறார் பர்வேஷ்முஷாரப்

## - மறுக்கிறார் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

(புதுடில்லி)

கார்கில் போரின்போது இந்தியாவுக்கு அதிக இழப்பு ஏற்பட்டதாக பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளதை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் மறுத்துள்ளார்.

அத்துடன் மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு எந்தப் பிரச்சினைகளிலும் எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசிப்பதில்லை என்று தேசிய சனநாயக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான ஜோர்ச் பெர்னாண்டஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாரதிய ஜனதா இந்துத்துவாவைத் திணிப்பதாக தாம் நினைக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் அரசு எந்தவொரு பிரச்சினையிலும் எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசிப்பதில்லை- என்று கூறியுள்ளார்.

# ஜெயலலிதா மக்களைப் பழிவாங்குகிறார் கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

நடந்து முடிந்துள்ள மக்களவைத்தேர்வில் ஆளும் அ.தி.மு.க. விற்கு ஆதரவு அளிக்காத மக்களுக்குப் பாடம் புகட்டுவதற்காக மேட்டூர் அணையில் இருந்து காவிரி நீரைப் பாசனத்திற்கு திறந்து விடுவதை முதலமைச்சர் ஜெயலலிதா தாமதப்படுத்தியுள்ளார் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

இத்தகைய பழிவாங்கும் போக்குடன் அ.தி.மு.க அரசு செயற்படுவதை சகிக்க மாட்டோம் என்று அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

சென்னையில் நேற்று அவர் நிகழ்வில் கலந்து கொண்ட போதே இவ்வாறு கூறியுள்ளார்.

-மணிப்பூர் நிலைமைகள் குறித்து-

# முதலமைச்சர்களுடன் மத்தியரசு ஆலோசனை

(புதுடில்லி)

வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் நிலைமைகள் குறித்து அனைத்துமாநில முதலமைச்சர்களுடனும் மத்தியரசு ஆலோசனை நடத்தியுள்ளது. இதனை நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சர் பிராணப் முகர்ஜி செய்தியாளரிடம் கூறியுள்ளார்.

பாதுகாப்புப் படையினர் தொடர்பான சட்டத்தைத் திரும்பப் பெறுவது குறித்து மணிப்பூர் ஆர்ப்பாட்டம் நடைபெறுவது குறித்து மத்தியரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதுமில்லை என்று கூறியுள்ளார்.

மணிப்பூர் பாதுகாப்புப் படை வீரர்கள் அத்துமிறி நடந்துள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான இராணுவ விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் குற்றம் செய்தவர்கள் நிச்சியம் தண்டனை பெறுவார்கள் என்றும் உறுதியளித்துள்ளார்.

-தீவிரவாதிகள் தொடர் தாக்குதல்-

# ஜம்மு காஷ்மீர் நிலமை குறித்து இந்.உள்துறை அமைச்சர் ஆராய்வு

(புதுடில்லி)

ஜம்மு.காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் மீது தீவிரவாதிகள் அடுத்தடுத்து தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தியிருப்பதை அடுத்து அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை அவசர கூட்டம்கூடி உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் ஆராய்ந்துள்ளார்.

தீவிரவாதிகளின் தற்கொலைத்தாக்குதலைத் தடுப்பது தொடர்பாக அணுகுமுறைகளையும் அவர் நேற்று முன்தினக் கூட்டத்தில் ஆராய்ந்துள்ளார்.

# இந்தியாவில் பணவீக்கம் 7.51 சதவீதமாக அதிகரிப்பு

(புதுடில்லி)


இந்தியாவில் பணவீக்கம் அதிகரித்துள்ளது 7.51 சதவீதமாக இந்தப்பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 4.27 சதவீதமாக பணவீக்கம் இருந்துள்ளதாக கூறப்படுகின்றது.

காய்கறிகளின் விலை உயர்வும் மற்றும் பொருட்களின் விலை உயர்வுமே பணவீக்கம் உயரக் காரணமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் பணவீக்கம் உயர்ந்துள்ளதாகக் கவலைப்பட வேண்டாம் என்று மத்தியரசு கூறியுள்ளது.

பருவமழை பெய்வதாலும் கொள்கைகளைச் சரியான முறையில் செயற்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தை கட்டுப்படுத்திவிட முடியும் என்றும் மத்தியரசு கூறியுள்ளது.

# பாகிஸ்தான் கிரிக்கெட் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்; ரமிஸ்ராஜா



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரியாக பதவி வகித்த முன்னாள் வீரர் ரமிஸ்ராஜா பதவி விலகியுள்ளார்.

இப்பதவிக்கு மேலாக கிரிக்கெட் வர்ணணையாளராகவும் பணியாற்றியதால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவர் பதவியை இராஜினாமாச் செய்ததாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர் கூறியிருப்பதாவது தாம் அவரின் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டாலும் மிகுந்த கவலையடைவதாகவும் அவர் சிறந்தவர்ணனையாளராக மிளிர வாழ்த்துத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

வர்ணனையாளராக இருப்பதை ஊடகங்கள் விமர்சிப்புதாகவும் இது தனது வர்ணனையாளர் பணிக்குப் பின்னடைவு என்று ரமிஸ்ராஜா தெரிவித்துள்ளார். ரமிஸ்ராஜா தற்போது சிறிலங்கா-தென்னாபிரிக்க அணிகள் பங்கேற்கும் போட்டிகளில் வர்ணனையாளராகப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

# ஆசியக் கோப்பை கால்பந்து போட்டி மூன்றாம் இடத்தை ஈரான் கைப்பற்றியது



ஆசியக் கோப்பை கால்பந்து போட்டியில் மூன்று முறை சாம்பியன் ஈரான் 3-ஆவது இடத்தைப் பிடித்தது, 10 ஆயிரம் ரசிகர்கள் குழுமியிருந்த பீஜிங் தொழிலாளர்கள் ஸ்டேடியத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ஈரான் 4-2 என்ற கோல் கணக்கில் பஹ்ரைன் அணியைத் தோற்கடித்தது.


ஆட்டத்தின் கடைசிப் 10 நிமிடங்களில் அணித் தலைவர் அடேயி 2கோல்கள் அடித்து ஈரானின் வெற்றியில் பெரும் பங்காற்றினார்.

இவ் வெற்றி மூலம் 2002 உலகக் கோப்பை தகுதிப் போட்டியில் பெற்ற தோல்விக்குப் பழி தீர்த்துக் கொண்டது ஈரான். அந்த ஆட்டத்தில் பஹ்ரைன் 3-1 என ஈரானைத் தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது குறிப்பிடத்தக்கது. முதன் முதலாக ஆசியக் கோப்பை போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெற்ற பஹ்ரைன் முன்னிலை அணிகளை மண் கவ்வ வைத்து முன்னேற்றம் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டுக்கான ஆசியக் கால்பந்து கிண்ணத்தை ஜப்பான் அணி சீனாவை 3-1 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க வீரர்களின் நிதானமான துடுப்பாட்டம்; காலி டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு

## விளையாட்டு



தென்னாபிரிக்க-சிறிலங்கா அணிகளுக்கிடையில் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

325 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி போட்டியின் கடைசி நாளான நேற்று மூன்று விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்களை பெற்றது.

சவால் மிகு வெற்றி இலக்கை நோக்கி விக்கெட் இழப்பின்றி ஏழு ஓட்டங்களுடன் நேற்றுக்காலை இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி அதன் மொத்த ஓட்ட எண்ணிக்கை 34 ஆக இருந்த போது முதல் விக்கெட்டை இழந்தது.

இதனை அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக அணித் தலைவர் கிரகம்ஸ்சிமித், மாட்டின் பென்ரஸ்பில்ட் இணைந்து 62 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். பென்சாஸ்விட் 29 ஓட்டங்களுடன் டில்சானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.


எனினும் அணித்தலைவர் கிரகம்ஸ்சிமித் நிதானத்துடன் ஜாக்கலிசுடன் இணைந்து 3 ஆவது விக்கெட்டுக்காக 57 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கி நகர்த்திச் சென்றார்.

மொத்த ஓட்ட எண்ணிக்கை 185 ஓட்டமாக இருந்த போது உபுல்சந்தனவின் பந்தைத் தடுத்தாட முயன்றதில் நேரே விக்கெட்டில் பட்டு ஸ்சிமித் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஜக்கலிஸ் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும், ருடெல்வ் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும் பெற்று வெற்றி தோல்வியற்ற முடிவை உறுதி செய்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஜயவர்த்தன தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி எஸ்.எஸ்.ஸி.மைதானத்தில் நடைபெறவுள்ளது.



## அரையிறுதி சுற்றில் அகாஸி

சின்சினாட்டியில் நடைபெற்று வரும் மாஸ்டர்ஸ் தொடர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்திற்கு அமெரிக்காவின் ஆந்த்ரே அகாஸி முன்னேறியுள்ளார். தரவரிசையில் 11 ஆவது இடத்திலுள்ள அகாஸி, வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டடத்தில் 7-6(12),6-3 என்ற செட் கணக்கில் ஸ்பெயின் வீரர் கர்லோஸ் மோயாவின் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 2 ஆம் இடத்தில் உள்ள அமெரிக்காவின் ஆன்டி ரொடிக் 6-3,6-3என்ற நேர் செட்களில் ஜேர்மனி வீரர் டாமி ஹாஸைத் தோற்கடித்து அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# தடை நீங்கியது கென்யாவுக்கு

கென்ய கால்பந்து அணிக்கு விதிக்கப்பட்ட தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது. கென்ய கால்பந்து அமைப்பில் பயங்கர குழப்பம், முறைகேடுகள் செய்து தலைமைப் பொறுப்பை சிலர் கைப்பற்றியதாகவும் செய்திகள் வெளியாகின. இந்தக் குழப்பத்தை அடுத்து,சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க கென்ய அணிக்கு, சர்வதேச கால்பந்து அமைப்பு கடந்த யூன் மாதம் தடை விதித்தது.


இந்தத் தடையை நீக்கவேண்டும் என கென்ய கால்பந்து வீரர்கள் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுத்தனர். உச்சக்கட்டமாக, கென்ய நாட்டின் தடகள பிரபலம் கிப்கீனோ தலைமையில் ஒரு குழுசர்வதேச கால்பந்து அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியது.

இந்தச் சந்திப்பின் போது கென்ய கால்பந்து சங்கத்தின் முறைகேடுகளைத் தவிர்த்து, ஒழுங்குபடுத்துவதாகவும் உறுதியளித்தது இதையடுத்து கென்ய கால்பந்து அணிக்கு விதிக்கப்பட்ட தடையை தற்காலிகமாக நீக்குவதாக சர்வதேச கால்பந்து அமைப்பு நேற்று அறிவித்துள்ளது.இந்த அறிவிப்பின் மூலம் கென்ய அணி 2006 இல் உலகக் கோப்பை மற்றும் உலகக் கோப்பை தகுதிச் சுற்றுப் போட்டிகளில் இனி பங்கேற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



ஆசியக்கிண்ணக் கால்பந்துப்போட்டியில் வெற்றியீட்டிய ஜப்பான் அணி வெற்றிக்களிப்பில் ...

## கேப்ரியாட்டி அதிர்ச்சித் தோல்வி



அமெரிக்க வீராங்கனை ஜெனிபர் கேப்ரியாட்டி மொன்ரியல் டென்னிஸ் காலிறுதிப் போட்டியில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். கனடாவில் மொன்ரியல் நகரில் மொன்ரியல் டென்னிஸ் போட்டிகள் நடந்துவருகின்றன. கடந்த வெள்ளியன்று நடந்த மற்றுமொரு காலிறுதிப் போட்டியில், பிரான்சின் அமெலி மவுரீஸ்மோ 3-6,6-2, 6-4 என்ற செட்களில் குரோஷியாவின் கரோலினா ஸ்பெர்மை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதிபெற்றார்.


# மூன்று நாடுகள் கிரிக்கெட்; பாகிஸ்தான் அணி அறிவிப்பு -அப்ரிடிக்கு மீண்டும் இடம்



நெதர்லாந்தில் இம்மாதம் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் கிரிக்கெட் மற்றும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி சாம்பியன்ஸ் கோப்பைக்கான 14 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.இந்த. அணியில் பாகிஸ்தான் சகலதுறை ஆட்டக்காரரும், அதிரடித் துடுப்பாட்ட வீரருமான சாகித் அப்ரிடி இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. "பாகிஸ்தான் அணிக்கு லெக்ஸ்பின்னர் தேவை என்பதாலும், தவிர பேட்டிங்கும் செய்யக்கூடியவர் அப்ரிடி. அவரது அனுபவத்தின் அடிப்படையில் தான் அவர் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்." என்று பாகிஸ்தான் தலைமைத் தேர்வாளர் வாசிம்பாரி தெரி வித்தார். 27 வயதான அப்ரிடி 1997 ஆம் ஆண்டு இலங்கையணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 37 பந்துகளில் சதமடித்துச் சாதனை படைத்தவர்.தவிர 176 ஒருநாள் போட்டிகளில் பங்கு கொண்டிருக்கிறார். கடைசியாக கடந்தமார்ச்மாதம் இந்தியாவிற்கு எதிரான போட்டியில் பங்குகொண்டார்.கடந்த மாதம் இலங்கையில் நடைபெற்ற ஆசியக் கோப்பைப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் அவர் இடம் பெறவில்லை.

பாகிஸ்தான் அணி இன்சமார்உல்ஹக் (கேப்டன்), யூசுப் யுகானா(துணைகேப்டன்), இம்ரான் பர்ஹட், சல்மான் பட், யாசிர் ஹமீது, யூனிஸ்கான், சோயப்மாலிக், சாகித் அப்ரிடி, அப்துல் ரசாக், மோயின் கான்(விக்கெட்கீப்பர்), முகமது சமி. சோயிப்அக்தர், ஷபிர் அகமது,ரானா நவேடுல் ஹசன் ஆகியோர் பாப்உல்மர் (பயிற்சியாளர்).ஹரூன்ரஷீத் (மனேஜர்),மூர்மாஸ்டீவன்சன் (டிரெய்னர்).

## சிந்தனைக்கு



நாங்கள் ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடி வருகிறோம். அந்த இலட்சியத்துக்காக உழைப்பதும, வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

தமிழீழ தேசியத்தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 09-08-2004

மின் அஞ்சல் Daily@eezhanatham.com

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948


## கோரிக்கை இதுவல்ல!

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குச் சென்று அவர்களுடன் சந்திப்புக்களை நடத்துவதற்குத் தாம் தயாராகவுள்ளதாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்குச் சிறிலங்கா இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது. இதனைச் சமாதான முயற்சிகள் தொடர்பாக இராணுவத்தரப்பு காட்டும் பேரக்கறையாகவோ, யுத்த நிறுத்த நடைமுறையில் அவர்கள் கொண்டுள்ள கரிசனையின் பாற்பட்டதாகவோ கொள்வதற்கில்லை.

ஏனெனில், சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பிடம் இத்தகையதொரு கோரிக்கையை விடுதலைப்புலிகள் முன்வைக்கவும் இல்லை. அத்தோடு, இராணுவத் தரப்பின் இத்தகைய அறிவிப்பு புலிகள் முன்வைத்த கோரிக்கையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புக்களைக் கொண்டதாகவும் இல்லை.

அதாவது, சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை அடுத்து இராணுவத்தினருடனான மாதாந்தச் சந்திப்புக்களை இடைநிறுத்திக் கொள்வதாக விடுதலைப்புலிகள் அறிவித்தமைக்கும், தற்பொழுது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பேச்சுக்கள் நடத்துவதற்கான இராணுவத்தின் அறிவிப்பிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

கிழக்கில் – குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஒருபுறத்தில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானதென்பதும், மறுபுறத்தில் இத்தகைய தாக்குதல்கள் / கொலைகள் நிறுத்தப்படாத பட்சத்தில் இருதரப்பிடையேயும் நடைபெறும் சந்திப்புக்களினால் பயன் இல்லை என்பதுமே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், விடுதலைப்புலிகள் மீதும், தமிழ் தேசிய விடுதலை உணர்வு மிக்கவர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டபோது அவை குறித்து விடுதலைப்புலிகள் தமது அதிருப்தியைத் தெரிவித்ததோடு, அவை நிறுத்தப்பட வேண்டும் என இராணுவத்தினருடனான மாதாந்தச் சந்திப்புக்களில் வலியுறுத்தினர். ஆனால், இராணுவத் தரப்பு இதில் அக்கறைகாட்டவில்லை.

மாறாக, தாக்குதல்களும், படுகொலைகளும் அதிகரிக்கவே செய்தன. விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய உணர்வுமிக்கவர்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில், அதிலும் குறிப்பாக – இராணுவக் காவலரண்களுக்கு அண்மையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆனால், இராணுவத் தரப்போ, சிறிலங்கா பொலிஸ் தரப்போ இவ்விடயத்தில் அக்கறைகாட்டவில்லை. வேறுவிதத்தில் கூறுவதானால், இப்படுகொலைகளின் பின்னணியில் படைத்தரப்பினரே இருந்ததாகக் கொள்ளத்தக்கதாக இருந்தது.

இதேவேளை, கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சில தாக்குதல்களில் இராணுவத் தரப்பின் நேரடிப் பங்களிப்பு / ஒத்துழைப்பு இருப்பதற்கான ஆதாரங்களும் வெளிப்பட்டிருந்தன. இவை யாவும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் படைத்தரப்பு அவ்விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக, பதற்ற நிலையே அதிகரித்துச் சென்றது. யுத்த நிறுத்தச் சூழ்நிலை பாதிப்படையும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது. மட்டக்களப்பின் நிலை பதற்றமானதாக உள்ளதென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவிக்கும் அளவிற்கு நிலைமை சென்றது. அவ்வாறு இருந்தும் படைத் தரப்பு நிலைமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சிக்கவில்லை.

மாறாக, இராணுவப் புலனாய்வுத்துறை, மட்டக்களப்பில் புதிய ஆயுதக்குழுக்களை உருவாக்கவும் அவற்றைப் பலப்படுத்தவும் அதன் மூலம் மட்டக்களப்பில் வன்முறையைத் தோற்றுவிக்கவுமே முனைந்தது. இந்நிலையில்தான் விடுதலைப்புலிகள் மட்டக்களப்பில் இராணுவத்தினருடனான சந்திப்புக்களையும், பேச்சுவார்த்தைகளையும் இடை நிறுத்தியிருந்தனர்.

இந்நிலையில், மட்டக்களப்பில் மீண்டும் விடுதலைப்புலிகள் – இராணுவத்தினருடனான சந்திப்புக்களும், பேச்சுவார்த்தைகளும் இடம்பெறுவதானால் புலிகள் பேச்சுவார்த்தையை இடை நிறுத்தியமைக்கான காரணங்களுக்குத் தீர்வு காணப்படுதல் வேண்டும். அதில் விடுதலைப்புலிகளுக்குத் திருப்தியும் ஏற்படுதல் வேண்டும். இதை விடுத்து கேள்வி ஒன்றாக இருக்கையில் பதில் வேறென்றாக இருப்பதினால் பயன் ஏதும் இல்லை. ஏனெனில், பேச்சுவார்த்தை எங்கு நடத்துவது என்பது இங்கு முக்கிய விவகாரமாக, அதாவது, சந்திப்புக்களுக்கு இடையூறாகவில்லை. பேசப்படும் விடயங்கள்: இணக்கம் காணப்படும் விடயங்கள் தொடர்பாக முன்னேற்றம் காணலாம் என்ற நம்பிக்கையை சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பு ஏற்படுத்தல் வேண்டும்.

# ஜே.வி.பி.க்கு சார்பாக செய்திவெளியிட்டதாக லேக்ஹவுஸ் நிறுவனம் மீது சந்திரிகா சீற்றம்

கடந்த புதன்கிழமை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பி.யினருக்குமிடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் பிழையான முறையிலும் ஜே.வி.பிக்கு சாதகமாகவும் வெளியிட்டதாக லேக்ஹவுஸ் நிறுவனம் மீது சனாதிபதி சந்திரிகா குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் தலைவர் ஜனதாச பீரிசை சனாதிபதி மாளிகைக்கு வரவழைத்து பூரண விளக்கம் தருமாறு பணித்துள்ளார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் ஜே.வி.பி.யினருக்கு ஆதரவாகச் செயற்படும் ஊடகவியலாளர்களின் பெயர்ப்பட்டியலை தமக்குத் தருமாறும் அவர் கோரி யுள்ளார்.

# அரசாங்கத்துடன் இணையவில்லை நல்ல முன் மொழிவுகளையே ஆதரிப்போம்.

### அநுரா விளங்காது கூறுகிறார் என்கிறது ஹெல உறுமய

ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்க உடன்பட்டிருப்பதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் பெரும்பான்மை குறித்து அரசாங்கம் மகிழ்ச்சி யடைகின்றது என சிறிலங்காவின் சுற்றுலா, கைத்தொழில்கள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுராபண்டாரநாயக்க தெரிவித்திருப்பதை ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் மறுதலித்துள்ளனர்.

இது குறித்து ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவிக்கையில்

"அரசாங்கத்தினால் நல்ல முன்மொழிவுகள் முன்னெடுக்கப்படும் போது ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்கும், இல்லாவிட்டால் அது அரசாங்கத்தில் இணைந்திருக்காது. பிரயோ சனம் ஏதுமில்லாத முன்மொழி வுகளை முன்வைக்கும் போது எமது கட்சி அரசிற்குப் பூரண ஆதரவு வழங்கும் என அநுரபண்டாரநாயக்க எண்ணியே மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய அரசாங்கம் ஒரு உத்தேச திட்டமொன்றை முன்வைக்கும் போது அதைக் கவனமாகப் படித்துப் பார்த்த பின்பே தனது ஆதரவை வழங்கும் என்றும் கூறியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் அத்துரலிய ரத்ன தேரர் பிக்குகள் அரசாங்கத்துடன் இணைந்திருக்கவில்லை. ஆனால் அவர்களுடைய ஆதரவு சூழ்நிலைகளுக்கேற்ப தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# பட்டதாரிகளிற்கு தொழில்பயிற்சி வழங்க வரவு-செலவுத்திட்டத்தில் நிதிஒதுக்கீடு

### நிதி அமைச்சர் கூறுகிறார்

அரசாங்கம் இந்த ஆண்டில் பட்டதாரிகளிற்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்கு 500மில்லியன் ரூபாவை செலவிடும் என்று கூறப்படுகின்றது. நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்த தகவலின்படி இதற்குரிய நிதி இந்த ஆண்டின் வரவு செலவு திட்டத்திலிருந்து பெறப்படும் என றும் கூறியுள்ளார். இந்தப் பயிற்சிக்கு பின்னர் குறிப்பிட்ட மாகாண சபைகள், பிரதேச செயலகங்கள் ஆகியன பட்டதாரிகளிற்கு வேலை வாய்ப்புகொடுப்பது பற்றி தீர்மானித்துக் கொள்ளுமென்றும் அவர்கூறினார். பெரும்பாலானோர் கல்வி, உள்நாட்டு, இறைவரி, சுகாதாரம், வங்கி ஆகிய துறைகளில் வேலை வாய்ப்பினை பெறக் கூடிய சாத்தியம் இருப்பதாக நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சீன ஆயுத நிறுவனத்துடனான ஒப்பந்தம் சிறிலங்காவால் நீடிப்பு

சீனாவுடன் செய்துக் கொள்ளப் பட்டுள்ள ஆயுத ஒப்பந்தத்தை சிறிலங்காஅரசாங்கம் நீடித்துள்ளது. சீன ஆயுத உற்பத்தி நிறுவனமான. நொரிக்கோவுடன் ஏற்கனவே இலங்கை ஆயுத ஒப்பந்தம் செய்து கொண்டது. இது பின்னர் வந்த காலப் பகுதியில்ரத்துச்செய்யப்பட்டது. இந்த நிலையில் குறிப்பிட்ட ஒப்பந்தத்தை நீடிக்கும் வகையில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத்தும் நொரிக்கோ நிறுவன அதிகாரி லீபேதவும் அண்மையில் இணக்கம் ஒன்றில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு ரி 56 ரக துப்பாக் கிகள், 151- 152 ரக ஆட்லறிகள், கனரக வாகனங்களை அழிக்கும் ஏவுகணைகள், போன்றவை கிடைக்கவுள்ளன. நொரிக்கோ நிறுவனமே ஆசியாவில் பாரிய உற்பத்தியை கொண்டுள்ள ஆயுத நிறுவனமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# ஐ.ம.சு.முன்னணி பதவிகளிலிருந்து சு.க சிரேஷ்ட உறுப்பினர்கள் விலகல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைவர் பதவியிலிருந்து சனாதிபதி இராஜினமாச் செய்ததையடுத்து முன்னணியில் பதவி வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தமது பதவிகளில் இருந்து ராஜினாமாச் செய்வதற்கு தீர்மானம் எடுத்துள்ளனர். பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான தி.மு.ஜயரத்தின கூட்டு முன்னணியின் அமைப்பாளர் குழுவில் இருந்து ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்துள்ளார். மேலும் சிலரும் பதவிவிலகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# பதவி உயர்வில் முறைகேடு நடந்ததாக இரு பொலிஸ் அதிகாரிகள் வழக்குத் தாக்கல்

இரண்டுபொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுக்களை தாக்கல் செய்துள்ளார்கள்.

பிரதம இன்ஸ்பெக்டர் தரத்திலான பதவியுயர்விற்கான சேவை மூப்புப்பட்டியலில் தமது பெயர்களை சேர்த்துக் கொள்ளாமை குறித்து அவர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

தம்மிலும் பார்க்க கனிஷ்ட உத்தியோகத்தர்களும் தவறிழைத்த உத்தியோகத்தர்களும் பதவியுயர்வு பெற்றிருக்கிறார்களென்று குறிப்பிட்ட மனுதாரர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த பதவியுயர்வை இரத்து செய்யுமாறு இரண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் உயர் மன்றத்தில் கோரியுள்ளனர்.

# காணிப் பரிமாற்றத்தில் ஊழல் என்ற குற்றச்சாட்டுக்கு ராஜித மறுப்பு

சட்டத்திற்குபுறம்பான வகையில் காணிகள் பரிமாற்றப்பட்டதாக தன்மீதுசுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைமுன்னாள்காணி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான

ராஜிதசேனாரட்ண முற்றாக நிராகரித்துள்ளார். இதுகுறித்து தான் அரசாங்கத்துடன் திறந்த விவாதத்திற்குச் செல்லவும் தயாராக இருப்பதாக நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னைய ஐக்கியதேசிய முன்னணி அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட காணி தொடர்பான பரிமாற்றல்கள் யாவற்றையும் ரத்துச் செய்வதாக தற்போதைய அரசாங்கம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட அவர் சனாதிபதியின் மகன் விமுக்தி குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பான பரிமாற்றத்தையும் அரசாங்கம் ரத்துச் செய்யுமா எனக் கேள்வி எழுப்பியுள்ளார். (32)

# வரலாற்று பாடத்தில் முல்லை மாவட்டத்தில் நூறுவீதமான மாணவர்கள் சித்தி

(அலுவலகசெய்தியாளர்)

நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தற்போது வெளியாகியுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் வரலாற்றுப் பாடத்தில் நூறு வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

தற்காலத்தில் க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்கள் வரலாற்றைக் கற்பதில் ஆர்வம் குறைவாகவே உள்ளனர். இருப்பினும் இப்பாடத்தினைக் கற்பதன்மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியுமெனவும் இதன் மூலம் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்குமெனவும் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவில் நடைபெற்று முடிந்த பரீட்சையில் வரலாற்றையும் ஒரு பாடமாகக் கற்ற 41 மாணவர்களும் சித்தியடைந்துள்ளதோடு 6மாணவர்கள் "ஏ" தர பெறுபேற்றையும், 22 மாணவர்கள் "பி" தர பெறுபேற்றையும், 12 மாணவர்கள் "சி" தர பெறுபேற்றையும், 01மாணவர் "எஸ்" தர பெறுபேற்றையும் பெற்றுள்ளனர். இவற்றில் "ஏ" தர பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களான புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த நமசிவாயம் சுமன் அருமைதாஸ் அருள்பிரியா, சிங்கராசா அருள்வதனி ஆகியோருக்கும் முத்து ஐயன் கட்டு வலதுகரை மகாவித்தியாலய மாணவர்களான கனகரத்தினம் கஜனரதி, செல்வநாயகம் வினோதா, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவி தர்மபாலன் சுபாசினி ஆகியோருக்கும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 5000 வீதம் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ச,தீ)

## வன்னி....

தார். அடுத்து அகவணக்கத்துடன் நிகழ்வுகள் யாவும் ஆரம்பமானது.

அங்கு வன்னிரெக் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் டாக்டர் சிவகோபால் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தலைமையுரையினைத் தொடர்ந்து பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடைய உரை இடம்பெற்றது.

தொடர்ந்து பட்டம்பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர்கழகம் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.பின்னர் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். மோகனதாஸ் அவர்களின் உரையும் இடம்பெற்றன.

தொடர்ந்து முதலாவது முறையாகப்பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்களுக்கு பட்டம் பெற்றமைக்குரிய சான்றிதழ்களைத் துணைவேந்தர் மோகனதாஸ் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்களுடன் கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன்,கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் உதவியுடன் நிறுவப்பெற்ற வன்னி தொழில்நுட்ப நிறுவகத்திலிருந்து முதன்முதலாக நேற்று 52 பட்டதாரிகள் பட்டம்பெற்று வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ.கு)

## நாட்டைத்..

பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கூறிவருவதும் கண்டிக்கப்பட வேண்டியது எனவும் ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கையிலுள்ள மூவின மக்களுக்குமான சமாதானத்தைப் பெற்றுக் கொடுப்பதே தமது நோக்கமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## முல்லையில்....

துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 50 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 44 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 07 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 11 பேருமாக மொத்தமாக 124 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இலங்கை முழுவதும் 41 ஆயிரம் பட்டதாரிகள் விண்ணப்பித்த போதும் 17 ஆயிரம் பேரே தெரிவுசெய்யப்பட்டவர்களாகும்.பட்டப்படிப்பின் பின் டிப்ளோமா(H.N.D.A) பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கும்20.05.2004இற்கு பின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியவர்கள் ஆகியோர் இப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இத் தகவல்கள் அனைத்தும் அரசாங்க திறைசேரி முகாமைத்துவப் பணிப்பாளரிடம் நேரடியாகச் சென்று பெற்றுக்கொண்டதாகவும் முதலாம் கட்டத்தில் விபரம் நேரகாலத்திற்கு அனுப்பாததினால் இரண்டாம் கட்டத்திலேயே பெயர்கள் வெளிவரும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (20)

## சனாதிபதி....

தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டி.எம் ஜெயரட்ணவும் அண்மையில் சனாதிபதிக்கும் ஜே.வி.பி.இற்கும் இடையில் முறுகல் வலுத்துவருவதை சுட்டிக் காட்டியமைஇங்கு குறிப்பிடத்தக்கது. (32)

## சந்திரிகாவின்....

பிரிந்தார் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே பிரதமர் பொன்டவிக்குடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (32)

## கிளி.முல்லை...

அவர்களின் மாவட்ட நிலையும் பின்வருமாறு.

### முல்லை மாவட்டம்

(உயிரியல் பிரிவு)

சி.காங்கேயனன் 2ஏ,பி மு/வித்தியானந்தா கல்லூரி -1,யோ. யொன்பிரகாஸ் ஏ,பி.சி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்-2, ஆர். ஜெயந்தன் 3பி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் -3,ச. வசீகரன் பி,2சி விசுவமடு ம.வி -4, பா.வாசகன் 2 பி,சி மல்லாவி மத்திய கல்லூரி -5.

(கலைப்பிரிவு)

க. ஜீவாசினி 2 ஏ,பி புதுக்குடியிருப்பு ம.வி-1, தி. கேசவன் 2ஏ,பி மு/வித்தயானந்தாக்கல்லூரி-2, பே.மேரி யசிந்தா 2ஏ.பி முல்லை ம.வி.-8,சி.இலங்கேஸ்வரன் ஏ,2பி மு.பாரதிவித்தியாலயம் -8.

(கணிதப்பிரிவு)

சி.தாரணி 3ஏ,பி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் -1,ச.ஸ்ரெஜியாதரன் ஏ,பி,சி மல்லாவி மத்திய கல்லூரி -2,மோ.மகீபன் 2பி.சி மல்லாவி மத்திய கல்லூரி -3,ந.முகுந்தன் 3சிமல்லாவி மத்திய கல்லூரி -4,ச.மாலவன் பி.சி.எஸ் மல்லாவி மத்திய கல்லூரி -8.

(வர்த்தகப்பிரிவு)

செ.கீரன் 3 ஏ புதுக்குடியிருப்பு ம.வி-1,நா.ரதீகன் 3ஏபுதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் -2,ச. அனுசியா 3ஏ வற்றாப்பளை ம.வி -3,ம.கஜீவனா 2ஏ,பிவற்றாப்பளை ம.வி-4, செ. ஜீவிதா 3ஏ மு / வித்தியானந்தா -5,சி. சிவரூபன் 3ஏ புதுக்குடியிருப்பு ம.வி -5,சி. அர்ச்சனா 3ஏ வற்றாப்பளை ம.வி-6,

சி.றஜிதா 2ஏ,பி முல்லை ம.வி -7,நா ஜெயதீபன் 3ஏ புதுக்குடியிருப்பு ம.வி 8.

### கிளிநொச்சி மாவட்டம்

(உயிரியல் பிரிவு)

பு.தர்மீதன் 2ஏ,பி. வட்டக்கச்சி ம.வி -2,கோ.பிரசாந் ஏ,2பி கிளிமத்திய கல்லூரி -3,எஸ்.மதிவதனன் 3 பி கிளிமத்திய கல்லூரி -4,ந.திலீபன் பி,2சி கிளிமத்திய கல்லூரி-6, செ. கிருஷாந்தன் பி,2சி கிளிமத்திய கல்லூரி-7.

(கணிதப் பிரிவு)

ஜ.ஜெயமலர் பிரான்சிஸ் ஏ,பி,சி கிளிமத்திய கல்லூரி -1,த.ஜதீஸ் பி,2சி கிளிமத்திய கல்லூரி -2,இ.சஞ்செயன் பி,2சி கிளி. இந்துக்கல்லூரி -3,சு.சஞ்சீவா பி,2சி பளை மத்திய கல்லூரி-4, வ.அரவிந்தன் 3சி பளை மத்திய கல்லூரி -6.

(கலைப்பிரிவு)

ஜெ.அருணா 2ஏ.பி வட்டக்கச்சி ம.வி -1,ச. றோகினி 2 ஏ,பி வட்டக்கச்சி ம.வி -2,இ.ரதீபா 2ஏ,பி இராமநாதபுரம் ம.வி 3, கு. பிரசாந்தி ஏ.2 பி வட்டக்கச்சி ம.வி -4, பா. கோமளா 2ஏ,பி வட்டக்கச்சி ம.வி -5,பா யாழினி ஏ,பி,சி வட்டக்கச்சி ம.வி -6.

(வர்த்தகப்பிரிவு)

இ. கமல்ராஜா 3ஏ அக்கராயன் ம.வி -1,சு. பாஸ்கரன் 3ஏ முருகானந்தா ம.வி- 2,பா.கருணாநிதி 3ஏ பூநகரி ம.வி -3,ந.சுகந்தினி 3ஏ முழங்காவில் ம.வி -3, நா. விஜிதரன் 3ஏ முழங்காவில் ம.வி -4,கு.சுவேந்திரகுமார் 3ஏ முருகானந்தா ம.வி -5,அ.இனிவில் தாஸ் 2ஏ.பி. முழங்காவில் ம.வி-6.

## ஒருதேசம்....

தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்

எமது போராட்டம் தொடங்குவதற்கு முன் மாதிரியாக அமைந்தது- எமது மக்களையும், எமது தேசத்தையும் நசுக்குவதற்கும், பலவீனப்படுத்துவதற்கும்,அழிப்பதற்கும் எதிரி எடுத்துக் கொண்ட முயற்சிகளில் முதன்மையானது எமது மக்களுடைய சொத்தாகிய கல்விச்சொத்தை அழித்தது. அது தான் அவர்கள் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட மிக முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாகும். அந்தக் கால கட்டத்தில் தான் எமது மக்கள் கிளர்ந் தெழுந்தார்கள, இளைஞர்கள், யுவதிகள் கிளர்ந்தெழுந்து ஒரு விடுதலைப் போராட்டத்தை கட்டியெழுப்பினார்கள். அதற்கு வழிகாட்டியாக ஒரு உயர்ந்த உன்னதமான தலைவருடைய பாதையிலே வழிநடத்தப்பட்டு இன்று நாங்கள் ஒரு உயர்ந்த மிகுந்த கௌரவமான நிலைக்கு வந்திருக்கின்றோம் . நீண்டகாலமாக போராட்ட சூழ்நிலைக்குள் இருந்து விடுபட்டு ஒரு சமாதானச் சூழ்நிலைக்குள் நாம் வந்துள்ளோம். இந்தக் காலகட்டத்தில் தான் புலம் பெயர்ந்த நாடுகளில் வசிக்கின்ற எமது உறவுகளால், தமிழர் தாயகத்தில் தொழில் நுட்ப அறிவுகள் மழுங்கடிக்கப்பட்டு கொண்டு செல்கின்றன. அவற்றை மீண்டும் கட்டியெழுப்பி எமது தேசம் மிகவும் ஒளிமயமான எல்லா வல்லமையும் பெற்ற சகல துறை சார்ந்த அம்சங்களிலும் ஏனைய நாடுகள் போன்று முன்னிலையில் திகழ வேண்டும் என்பதற்காக அவர்களுடைய ஒரு பெரிய அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகவேதான் இந்த வன்னி ரெக் நிறுவனத்தை பார்க்கின்றோம். உண்மையிலேயே நாங்கள் இன்று உலகத்தினுடைய வளர்ச்சிப் போக்கை பார்க்கின்ற போது எமது இளம் தலைமுறை இங்கே பெறுகின்ற கல்வி அதற்கு நிகரானதா? அதற்கு ஈடுகொடுக்க முடியுமா? என்கின்ற பல கேள்விகள் எழுகின்றன. இருந்தாலும் எமது தலைமுறையை யுத்த காலத்திற்கும் எதிரியால் தொடுக்கப்பட்ட தடைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து எங்களுடைய தலைமுறை ஏதோ ஒரு வகையில் அறிவியல் சமுதாயமாக ஆரம்பக்கல்வியையாவது பெற்று கல்வி ஆர்வமுள்ள சமுதாயமாக கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதில் எமது தேசியத் தலைவர் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறார்.

உயர் தொழில் நுட்பத்திற்குள்ளும் இன்று உலகம் பெரும் மாற்றத்தை கண்டு கொண்டு செல்கிறது.அறிவியல் துறையையும், உயர் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியையும் தான் உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த உலகத்தின் வளர்ச்சிப் போக்கிற்கு ஏற்ற வகையில் எங்களுடைய மக்களும் தலைமுறையும் அதற்குள் நுழையாது விட்டால் இந்த உலகப்பந்துக்குள் ஏனைய மக்களைப் போன்று வாழ்கின்ற சூழ்நிலை இல்லாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும் என்பதற்காகவே தான் நாங்கள் இந்த அறிவியல் சார்ந்த தொழில்நுட்பத்துறையிலே எங்களுடைய தேசத்தையும் எங்களுடைய மக்களையும் மேம்படுத்த வேண்டும் என்ற எங்களுடைய தேசியத் தலைவருடைய மிகுந்த எதிர்பார்ப்பை புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கின்ற மக்களுக்கு நாங்கள் உணர்த்தியபோது அவர்களாக முன்வந்து இன்றைக்கு எமது தாயகப்பகுதியில் மிகவும் உயர்ந்த ஒரு தொழில்நுட்ப கல்லூரியை நிறுவி அதனூடாக பயிற்சியை வழங்கி இன்றைக்கு ஓர் தொழில்நுட்ப ரீதியில் நாங்களும் முன்னிலையில் இருக்கின்றோம் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டக்கூடிய வல்லவர்களாக நாங்கள் வளர்த்திருக்கிறோம்.

அந்தவகையில் இந்த தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவிய எமது புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது உறவுகளுக்கு நாங்கள் நன்றிக்கடன் உடையவர்களாக இருக்கின்றோம்.

நிச்சயமாக எங்களுக்கு முழுநம்பிக்கை இருக்கின்றது உலகத்தினுடைய வளர்ச்சிக்கேற்ப எமது தமிழீழ தேசமும் தமிழ்மக்களும் வளர்ச்சிகண்டு விடுவார்கள் அந்த உயர்ந்த அறிவியல் தொழில்நுட்ப ஆற்றலுக்குள் நாங்களும் சென்றுவிடுவோம். இந்த உலகப்பந்துக்குள்ளே ஒரு அறிவியல் தொழில் நுட்பத்திலே மிகவும் வளர்ச்சியடைந்த நாகரிகம் மிக்க, உயர்ந்த சமுதாயமாக நாங்கள் இந்த பூமிப் பந்துக்குள் வாழ்கின்ற காலம் ஏற்படுகின்றது. அதற்குள் நுழைவதற்கு எமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது.

ஒரு தேசம் தனது சொந்தக்காலில், சொந்தவளத்தில் தமது சொந்த முயற்சியில் முன்னேறுகின்ற போதுதான் அந்த மக்களினம் இந்தப் பூமிப்பந்திலே உறுதியான இடத்தைப் பெறலாம். அந்த வகையில் எமது தேசியத் தலைவருடைய எண்ணத்திற்கு ஏற்ப நாங்கள் சொந்தக் காலில், சொந்தப் பலத்துடன், சொந்த வளத்தில் தங்கியிருக்க வேண்டும். என்கின்ற அவருடைய வழிகாட்டலுக்கு அமைய எங்களுடைய புலம்பெயர்ந்த மக்கள் சகலதுறைகளிலும் எங்களுக்கு பெரும் பங்காற்றி வருகிறார்கள்.

எனவே இந்த வன்னி தொழிநுட்ப நிறுவனத்தில் பயிற்சிபெற்று பட்டம்பெற்றுச் செல்கின்ற மாணவர்களாகிய உங்களிடம் நாங்கள் கேட்டுக்கொள்கின்ற விடயம் ஒரு சமூகசிந்தனையுள்ள தேசப்பற்றுள்ள உங்கள் தேசத்திற்காகவும் உங்கள் மக்களுக்காகவும் உழைக்கின்றவர்களாக நீங்கள் திகழவேண்டும். உங்கள் பணிகள் தொடரவேண்டும். என்று நாங்கள் வேண்டிநிற்கின்றோம். அதனை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு.

அதேபோன்று எமது தலைவருடைய சிந்தனையையும் எங்களுடைய தேசத்தையும் மக்களையும் ஒரு உயர்ந்த உன்னதமான தேசமாகவும் இனமாகவும் கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற அவருடைய எதிர்பார்ப்பையும் எமது மக்கள் நிறை வேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. என்று தனது உரையில் குறிப்பிட்டார். (சோ,கு)

## ஜயந்த....

பதுடன், அரசசெயலக அதிகாரி களையும் மற்றும் கிறிஸ்தவ மதகுருமார்களையும்,சமூக பிரஜைகள் குழுக்களின் பிரதி நிதிகளையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.அதேசமயம் நெருக்கடிக்குள் ளாகியிருக்கும் தற்போதையசமாதான நடவடிக்கைகளின் நிலைமைகள் தொடர்பாக பாதுகாப்புப் படையினருடன் சில கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளுவார் என தெரிவிக்கப்படுகிறது. (33)

## சாவு அறிவித்தல்

தோற்றம் 06 - 08 - 1942



மறைவு 07 - 08 - 2004

### அமரர் இராமலிங்கம் சுப்பையா

கொழும்பு அவிசாவளையைப்பிறப்பிடமாகவும்; இல 419, ஜெயபுரம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சுப்பையா காலமானார். அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும்; அருள்மணி, கணேஷ், ரமேஷ், நந்தகுமார் ஆகியோரின் தகப்பனாரும்; S.கணேஸ், சுரேக்கா, சந்திரகலா, ஜெயதீஸ்வரி ஆகியோரின் மாமனாரும், மயூரன்,கவி,சுஜி,சுரோன், நிது, கஜந்திகுமார், பிரிந்தா, தாரகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்; அன்னாரின் பூதவுடல் 11.08.2004, புதன்கிழமை காலை 10.00 மணிக்கு எட்டயதேட்டை எக்லாஸ் தோட்டம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முறிகண்டிப்பிள்ளையார்
ப.பொ.வாணிபம்,
ஜெயபுரம். (4893)

தகவல்:-
ச.நந்தகுமார் (மகன்)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 09 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.